මිනිස්බල සහ රැකී රක්ෂා දෙපාර්තමේන්තුව

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம

**Department of Manpower and Employment**





# කාර්යසාධන වාර්තාව

# செயலாற்றுகை அறிக்கை

# Performance Report 2019

**Department of Manpower and Employment**
**9 th Floor, Sethsiripaya 2nd Stage,**
**Battaramulla.**

# 2019 ஆம் வருடத்திற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

# செலவுத் தலைப்பு இலக்கம் - 328

## உள்ளடக்கம்


பக்க இலக்கம்

**1. அத்தியாயம் 01 – நிறுவனக்கட்டமைப்பு / செயற்பாடுகளின் சாராம்சம்**

| | | |
|---|---|---|
| **1.1** | அறிமுகம் | 4 |
| **1.2** | எமது நோக்கு, பனிநோக்கு மற்றும் குறிக்கோள் | 5 |
| **1.3** | திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள் | 6 |
| **1.4** | ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு | 7 |
| **1.5** | திணைக்களத்தின் பிரதான கிளைகள் மற்றும் செயற்பாடுகள் | 8 -32 |
| **1.6** | வெளிநாட்டு உதவி பெறும் கருத்திட்டங்களின் தகவல்கள் | 32 |

**2. அத்தியாயம் 02 –முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்குகை**

| | | |
|---|---|---|
| **2.1** | முன்னேற்றம் | 34-40 |
| **2.2** | சவால்கள் மற்றும் எதிர்கால குறிக்கோள் | 41 |

**3. அத்தியாயம் 03 – ஆண்டின் மொத்த நிதி செயலாற்றுகை**

| | | |
|---|---|---|
| **3.1** | நிதி செயலாற்றுகை கூற்று | 43-44 |
| **3.2** | நிதி நிலைமைகள் தொடர்பான கூற்று | 45 |
| **3.3** | நிதிப்பாய்ச்சல் தொடர்பான கூற்று | 46 -47 |
| **3.4** | நிதிக்கூற்றுக்களது குறிப்பு | 47 |
| **3.5** | வருமான சேகரிப்பின் செயலாற்றுகை | 47 |
| **3.6** | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்துவதன் செயலாற்றுகை | 47 |
| **3.7** | நி.பி.208 இன் அடிப்படையில் வழங்கப்பட்ட ஒதுக்குகள் | 48 |
| **3.8** | நிதியல்லா சொத்துக்களை அறிக்கை செய்வதலின் செயலாற்றுகை | 48 |
| **3.9** | கணக்காய்வாளரது அறிக்கை | 49 |

**4. அத்தியாயம் 04 – செயலாற்றுகை குறிகாட்டிகள்**

| | | |
|---|---|---|
| **4.1** | நிறுவனத்தின் செயலாற்றுகை குறிகாட்டி | 51 |

**5. அத்தியாயம் 05 – நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்து கொள்வதற்கான செயலாற்றுகை (SDG)**

| | | |
|---|---|---|
| **5.1** | அடையாளங்கானப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் | 53 -55 |
| **5.2** | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதன் வெற்றிகள் மற்றும் சவால்கள் | 55 |

**6. அத்தியாயம் 06 – மனித வள திரட்டு**

| | | |
|---|---|---|
| **6.1** | ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம் | 57 |
| **6.2** | நிறுவனத்தின் செயலாற்றுகையில் மனித வள குறைபாடுகளின் தாக்கம் | 57 -58 |
| **6.3** | மனித வள அபிவிருத்தி | 59-61 |
| **6.4** | நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பயிற்சித் திட்டங்களின் பங்களிப்பு | 62 |

**7. அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை** 64 – 69

**இணைப்புக்கள்**

# அத்தியாயம் 01

# நிறுவனக்கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகளின் சாராம்சம்

# 1. அறிமுகம்

## 1.1 மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

2010.02.12 ஆம் திகதிய 1640/31 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியிலுள்ள ஒழுங்குவிதிகளின்படி மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் 2010 ஆம் ஆண்டில் தொழில் உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது திறன் அபிவிருத்தி, வேலைவாய்ப்பு, மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது. A தரத்தில் தாபிக்கப்பட்ட இத்திணைக்களமானது வேலைவாய்ப்பை மேம்படுத்துத்துதல், வேலைவாய்ப்பைத் திட்டமிடுதல், வேலைவாய்ப்பு மற்றும் ஊழிய சந்தை தகவல்கள், தொழில் வழிகாட்டல் செயற்பாடுகள், மீள் வேலைவாய்ப்பிற்கான பயிற்சிகள் போன்ற விடயப்பரப்புகளை உள்ளடக்கியுள்ளது. இதற்குப் புறம்பாக திணைக்களத்திற்கு, அரச வேலைவாய்ப்புகளை பேணிச் செல்லுதல் மற்றும் தேசிய மனிதவள மற்றும் தொழில் சேவை வாய்ப்புகளது ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்திணைக்களத்தின் ஊடாக இற்றைவரை ஊழியச் சந்தையின் தகவல்கள் அலகு ஊடாக நடாத்தப்பட்ட ஆய்வுகளை பயன்படுத்தி தொழில் வழிகாட்டல் மற்றும் வேலை உருவாக்கல் மேம்படுத்தலுக்குரிய நடைமுறைப்படுத்தப்பட்ட பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதனூடாக அதிகளவான பயனாளிகளுக்கு நன்மைகளை வழங்கி தொழில் நிலையம் ஊடாக இந்நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு, தொழிலற்ற இளைஞர்களுக்கு தனியார் துறையில் தொழில்வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளும் செயற்பாடும் மேற்கொள்ளப்படுகின்றது. இதனடிப்படையில் எமது நீண்டகால இலக்குகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

1. பூகோள ரீதியில் போட்டித்தன்மையுள்ள திறன்மிக்க மற்றும் பல்திறன்களைக் கொண்ட இலங்கை ஊழியச்சந்தையை கட்டியெழுப்புதல்.
2. தொழிலின்மையை குறைப்பதற்காக பல்வேறு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்.
3. பல்வகை பூரணமான ஊழியச் சந்தை தகவல் கட்டமைப்பை உருவாக்குதல்.

## 1.2 எமது தொலைநோக்கு, பணிப்பிரகடனம் மற்றும் நோக்கங்கள்

**தொலைநோக்கு**

உலக தரத்தில் இலங்கையின் தொழிற்படை

**பணிப்பிரகடனம்**

பரந்த ஆற்றல்களைக் கொண்ட சுறுசுறுப்பான மற்றும் உலகளாவிய போட்டிமிக்க தொழிற்படையொன்றை உருவாக்குதல் மற்றும் எமது மனிதவளங்களின் மொத்தப் பலத்தை இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்திக்காக ஈடுபடுத்துதல்.

### எமது நோக்கங்கள்

1. தேசிய மனிதவள மற்றும் சேவை வழங்கல் கொள்கைகளை தயாரித்து திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
2. திறன்கள் பொருந்தாமை போன்ற கட்டமைப்பு ரீதியான வேலையின்மை பிரச்சினைகளைத் தீர்த்தல்.
3. தற்போதைய ஊழியச் சந்தைக்குரியதும் மற்றும் எதிர்காலத்தில் ஊழியச் சந்தையில் இணைந்து கொள்ளவுள்ள அனைத்து இலங்கையர்களுக்கும் சரியான தொழில் வாய்ப்புகளை அடைந்து கொள்வதற்கு வசதிகளை வழங்குதல்.
4. மனிதவலு திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் எதிர்வுகூறல்கள்
5. முறைசாரா பிரிவுகளை அபிவிருத்தி செய்தல்
6. தனியார் துறை தொழில்களுக்கு, தொழில் எதிர்பார்த்திருப்போரை ஊக்கப்படுத்துதல்.
7. சுதந்திரமான பொதுமக்கள் தொழில் வாய்ப்பை வழங்குதல்.
8. ஆபத்துக்குள்ளாகியுள்ள குழுக்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் குறை அபிவிருத்தி பிரதேசங்களில் வாழ்கின்ற நபர்களுக்கு மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பிலான வசதிகளை வழங்குதல்.
9. பூகோள ரீதியாகவும் உள்நாட்டு ரீதியிலும் சரியான ஊழியச்சந்தை தகவல்களை இலங்கையருக்கு வழங்குதல்.
10. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊழியச்சந்தை நெகிழ்வுகளை எதிர்வுகூறல்.


இவ்விதத்தில் வேலையின்மையை குறைத்தல் மற்றும் சிறந்த வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் என்ற நோக்கங்களை அடைந்து கொள்ளும் நோக்குடன் இத்திணைக்களமானது தனது மனித வளங்களைப் பயன்படுத்தி பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

## 1.3 திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள்

அதனடிப்படையில் இத்திணைக்களத்திற்கு கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- தேசிய மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு கொள்கையை தாயரித்து நடைமுறைப்படுத்துதல்.
- தொழில் உருவாக்கல் மற்றும் மேம்படுத்தல் செயற்பாடுகள்
- தொழில் வழிகாட்டலுக்குரிய செயற்பாடுகள்
- ஊழியச் சந்தையின் தகவல்களைத் திரட்டுதல், பகுப்பாய்வு மற்றும் விநியோகித்தல்.
- தொழில் இல்லம் (ரெகியா கேந்திர) ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற பிற சேவைகள் மற்றும் மேற்கூறப்பட்ட விடயப் பரப்புகளுடன் தொடர்புடைய ஏனைய அனைத்து செயற்பாடுகளும்.

## 1.4 ஒழுங்கமைப்பு கட்டமைப்பு




1. கிராமிய தொழில் மற்றும் நுண்நிதி நிகழ்ச்சித்திட்டங்கள்
2. முறைசாரா துறையின் தொழில் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்
3. தொழில் பொருத்தப்பாடு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
4. தொழில் சமூக நிகழ்ச்சித்திட்டங்கள்

1. தொழில் வழிகாட்டல் தகவல் கட்டமைப்பை தயாரித்து விநியோகித்தல்.
2. தொழில் வழிகாட்டல் கற்றல் மற்றும் ஆய்வு
3. தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தல்.

1. நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடல் நடைமுறைப்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
2. வெளிக்கள நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தல்
3. புதிய நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளங்கள் காணல் மற்றும் திட்டமிடல்.

1. பொது நிருவாகம்
2. ஆளனி மற்றும் நிறுவனச் செயற்பாடுகள்
3. திணைக்கள போக்குவரத்து செயற்பாடுகள்
4. களஞ்சிய சேவைகள்
5. நலனோம்பல் செயற்பாடுகள்

1. வருடாந்த திட்டங்களை தயாரித்தல் மற்றும் அறிக்கைகளைத் தயாரித்தல்
2. ஆளினி அபிவிருத்தி
3. முன்னேற்ற மதிப்பீட்டு செயற்பாடுகள்
4. கிளைகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பு
5. திணைக்கள வெளியீடுகள்

1. ஊழியச் சந்தை சந்தை மேம்படுத்தல் ஆய்வு
2. ஊழியச் சந்தை தகவல்களை சேகரித்தல் பகுப்பாய்வு செய்தல் விநியோகித்தல்.

1. மனிதவலு எதிர்வுகூறல்
2. துறைசார் மனிதவலு திட்டங்களைத் தயாரித்தல்.
3. உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு செய்வதன் ஊடாக திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குரிய செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
4. மனிதவலு அபிவிருத்திக்குரிய கொள்கைகள் மற்றும் பிரேரணைகள் முறைகள் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

1. தேசிய தொழில் சேவை வலையமைப்பை தயாரித்து செயற்படுத்துதல்
2. தொழில் வழங்கும் நிறுவனங்களுக்கிடையே ஒருங்கிணைப்பை மேற்கொள்ளுதல்
3. தொழில் சந்தை

1. திணைக்களத்தின் நிதி முகாமைத்துவ செயற்பாடுகள்

1.திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு செயற்பாடுகள்

## 1.5 *திணைக்களத்தின் பிரதான கிளைகள் மற்றும் செயற்பாடுகள்*

- நிருவாகப் பிரிவு, திட்டமிடல் மற்றும் முன்னேற்ற தொழிற்பாட்டு அலகு
- கணக்கு பிரிவு
- தொழில் உருவாக்கல், மேம்படுத்தல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு
  - தொழில் உருவாக்கல் மற்றும் மேம்படுத்தல் அலகு
  - தொழில் வழிகாட்டல் அலகு
- மனிதவலு திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி பிரிவு
  - ஊழியச் சந்தை தகவல் அலகு
  - தேசிய மனிதவள மற்றும் தொழில் வழங்கல் கொள்கை அலகு
  - பொதுமக்கள் தொழில் சேவை
- உள்ளக கணக்காய்வு பிரிவு

### 1.5.1 நிருவாகப் பிரிவு

நிர்வாகப் பிரிவின் கீழ் பின்வரும் கிளைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

i. தாபனப் பிரிவு
ii. திட்டமிடல் மற்றும் முன்னேற்ற தொழிற்பாட்டு பிரிவு

திணைக்களத்தின் பணிகளை மேற்கொள்ளும்போது, உள்ளக நிர்வாக செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பதன் மூலம் உன்னதமான செயலாற்றல்களை அடைந்துகொள்வதற்காக திணைக்களத்தின் சிரேஸ்ட முகாமைத்துவத்திற்கு ஒத்துழைப்புகளை வழங்குதல், நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுத்து மதிப்பீடுசெய்தல், மேம்படுத்துதல் என்பன நிர்வாகப் பிரிவிற்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பிரதான கடமைகளாகும். மேலும் திணைக்களத்தின் தரத்தினைப் பேணிச்செல்வதற்காக பயனுள்ள, பௌதீக ரீதியான அபிலாசைகளுக்கும், செயற்பாடுகளுக்கும் பொருத்தமான, உயர்தரம்மிக்க, பணியாட் தொகுதியினரை உருவாக்கவும், பிரிவுகளினிடையே சிறந்த, முறையான ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துதல், பணியாட்டொகுதியின் நலன்களை மேம்படுத்தவும், ஏனைய பிரிவுகளுக்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குதல் நிருவாகப் பிரிவின் பொறுப்புக்களாகும்.

#### 1.5.1.1 தாபனப் பிரிவு

உத்தியோகத்தர்களின் தனியாள் கோவையை பேணிச் செல்லுதல், பயிற்சி தேவைப்பாடுகளை அறிந்து கொள்ளுதல், பயிற்சிகளுக்கு அலுவலர்களை ஈடுபடுத்துதல், தினசரி தபால்கள், ஆட்சேர்ப்பு, ஒழுக்காற்று கட்டுப்பாடுகள் உள்ளிட்ட திணைக்களத்தின் தொழிற்பாட்டு நிருவாக செயற்பாடுகள், போக்குவரத்து செயற்பாடுகள் என்பன பிரதானமாக இந்த பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுவதோடு இந்த பிரிவில் 25 உத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்றார்கள்.

#### 1.5.1.2 திட்டமிடல் மற்றும் முன்னேற்ற தொழிற்பாட்டு அலகு

திணைக்களத்தின் வருடாந்த ஒருங்கிணைந்த செயற்றிட்டங்களைத் தயாரித்தல், திணைக்களத்தின் வருடாந்த செயற்றிட்டங்களுக்கமைய மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் வெளிக்கள உத்தியோகத்தர்களின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் அறிக்கை செய்தல், முன்னேற்ற மீளாய்வு, கூட்டம் நடாத்துதல் மற்றும் வழிப்படுத்துதல், திணைக்களத்தின் வருடாந்த செயற்றிட்டத்திற்கமைய திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பாக அமைச்சு உட்பட அத்தகவல்களை கோருகின்ற நிறுவனங்களை அறிவுறுத்துதல் போன்ற செயற்பாடுகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன் 13 உத்தியோகத்தர்கள் இப்பிரிவில் கடமையாற்றுகின்றார்கள்.

### 1.5.2 கணக்கு பிரிவு

திணைக்களத்தின் நிதி நிருவாக செயற்பாடுகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன் 13 உத்தியோகத்தர்கள் இப்பிரிவில் பணியாற்றுகின்றார்கள்.

## 1.5.3 தொழில் உருவாக்கல், மேம்படுத்தல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு

தொழில் வழிகாட்டல், தொழில் உருவாக்கல் மற்றும் மேம்படுத்தல் பிரிவினால் அமுல்படுத்தப்படுகின்ற பல்வேறு,ஒன்றுடனொன்று தொடர்புபட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் ஒட்டுமொத்த இலங்கைத் தொழிற்படையினை, முறையான தொழில்களில் ஈடுபடுத்துவதற்கும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், அதேபோல தேசிய கொள்கைத்திட்டத்தினை தனிநபர் ஆற்றல்களுக்கும், திறமைகளுக்குமேற்ற தொழில்களை விரிவுபடுத்தும் நோக்கில் மீளமைத்தல், போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தக் கடமைகளை ஆற்றுவதற்காக இப்பிரிவு இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதுடன், அப்பிரிவுகள், உதவிப் பணிப்பாளர் ஒருவரின் வழிகாட்டலின்கீழ் அமுல்படுத்தப்படுகின்றது. இலங்கை பூராகவும் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள தொழில் வழிகாட்டல் அலுவலர்கள், மனிதவள அபிவிருத்தி உதவியாளர்கள் மற்றும் அபிவிருத்தி அலுவலர்களின் மூலம் இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் அடிமட்டம்வரை கொண்டு செல்லப்படுகின்றது.

அதனடிப்படையில், இந்த கிளையின் செயற்பாடுகள் பிரதானமாக, இரண்டு அலகுகள் ஊடாக இடம்பெறுகின்றன.

**<u>தொழில் உருவாக்கல் மற்றும் மேம்படுத்தல் அலகு</u>**

சனத் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் தகவலின் படி, இலங்கை தொழிலாளர் படையில் இளைஞர்களின் வேலையின்மை தன்மையானது அதிகரித்து வருகிறது. அந்த வேலையின்மை தகவல்களின்படி, படித்த இளைஞர்களின் வேலையின்மை நாட்டில் ஒரு பெரிய சவாலாகத் மாறி வருகின்றது. இலங்கையில் வேலையின்மை பிரச்சினையை குறைப்பதே மனிதவள மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் நோக்கம் ஆகும்.

உலக மட்டத்தில் ஊழியப்படையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு தமது செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் வேலை உருவாக்கல் மற்றும் மேம்படுத்தல் அலகானது இரண்டு பிரதான நோக்கங்களின் கீழ் இலங்கையின் வேலையின்மைக்கு தீர்வு காண எத்தனிக்கின்றது.


- தொழில்களை உருவாக்கல்
- தொழில் மேம்படுத்தல்

### தொழில் வழிகாட்டல் அலகு

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகிப்பது மனிதவளமாகும். எமது நாட்டின் மனித வளம் தொடர்பிலான ஆய்வின் போது பாடசாலை கல்வியின் பல்வேறு கட்டங்களில் பயிற்றப்படாத ஊழியர்களாக இளைஞர்கள் ஊழியப்படையில் இணைவதுடன் ஊழியச் சந்தையில் தொழில் திறன்கள் இணங்கப்படாமை தொடர்பான பிரச்சினைகள், தொழில் விருப்பம், ஊழியப்படையில் பங்களிப்பு குறைதல், சந்தையின் புதிய போக்குகள் தொடர்பான குறைவான அறிவு சரியான தொழில் திட்டமிடலொன்று காணப்படாமை, படித்த மக்களிடையே அதிகளவான வேலையின்மை சதவீதம் காணப்படுதல் போன்ற பிரச்சினைகளை காணக்கூடியதாக உள்ளது.

நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்கின்ற வினைத்திறனான மனிதவளமொன்றை கட்டியெழுப்பும் பொருட்டு தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை ஊடாக மிகச்சிறந்த பங்களிப்பொன்று வழங்கப்படுகின்றது. அதனால் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தின் தொழில் வழிகாட்டல் என்ற ரீதியில் எமது திணைக்களத்தின் நோக்கம் யாதெனில் சேவைபெறுநர்களது தொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி ஊடாக நாட்டின் மனித வளத்தின் முழுச் சக்தியையும் வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்தி சர்வதேசத்திற்கு பொருந்தக்கூடிய விதத்தில் மனித வளங்களை உருவாக்குவதற்கு பங்களிப்பு செய்தல்.

இந்த நோக்கத்தை அடைந்து கொள்ளும் பொருட்டு இந்த இரண்டு அலகுகளின் ஊடாக தொழிலை எதிர்பார்த்திருக்கும் மற்றும் புதிதாக தொழிற்சந்தையில் பிரவேசிக்கும் மற்றும் எதிர்காலத்தில் பிரவேசிக்கவிருக்கும் மக்களுக்கு தொழில் வழங்கலுடன் தொடர்புடைய வசதிகளை வழங்கும் நோக்குடன் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன.




## தொழில்கள் உருவாக்குக்கும் நிகழ்ச்சித்திட்டம்

### தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

ஆண்டுதோறும் சுமார் 200,000 வேலை தேடுபவர்கள் இலங்கை தொழிற்படையில் நுழைகிறார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. புதிய வேலைவாய்ப்பு ஆதாரங்கள் மூலம், இலங்கையில் வேலையின்மையைக் குறைக்கும் நோக்கத்துடன் திணைக்களமானது பின்வரும் திட்டத்தைச் செயல்படுத்துகிறது. கிராமப்புற பொருளாதாரத்தினைக் கட்டி எழுப்புவதன் மூலம் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதும், தொழில் முனைவோர் மற்றும் சுயதொழில் செய்பவர்களை உருவாக்குவதும் இதன் முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் தொழில்முனைவோரை முன்னேற்றுவதன் மூலம், வருமானம் ஈட்டும் வழிகளுக்கு இளைஞர் சமூகம் ஊக்குவிக்கப்படுகின்றது. இந்த திட்டம் மனிதவள அபிவிருத்தி உதவியாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒருங்கிணைப்பின் கீழ் மூன்று நாள்

நிகழ்ச்சித்திட்டமாக நடத்தப்படுகிறது. தற்போது பிரதேச செயலக மட்டத்தில் சிறு மற்றும் நடுத்தர அளவிலான வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தொழில் முனைவோர் மற்றும் புதிய தொழில்களைத் தொடங்க விரும்பும் பயனாளிகளுக்கு இது வழங்கப்படுவதுடன் மற்றும் திட்டத்தில் பங்கேற்கும் பயனாளிகளின் வணிக மேம்பாட்டிற்காக எமது திணைக்களத்தால் பின்வரும் பங்களிப்புக்களும் செய்யப்படுகிறது.

முயற்சியாண்மைப் பண்புகளைக் .கட்டி எழுப்பத் தேவையான வழிகாட்டுதல்கள்

- முகாமைத்துவம் , சந்தைப்படுத்தல், மக்கள் தொடர்பு, விலை நிர்ணயம் போன்றவற்றுக்கான வழிகாட்டுதலை வழங்குகிறது.
- வாழ்க்கைத் தத்துவம் மற்றும் வணிக தத்துவத்தை உருவாக்க வழிகாட்டல் தேவை.
- கருத்திட்ட அறிக்கை தயாரித்தல் குறித்து விரிவான அறிவை வழங்குதல்.
- நிதி வசதிகள் போன்றவற்றிற்காக நிறுவனங்களை ஒருங்கிணைத்துத் தருகிறது .
- பயிற்சி தொடர்பான சான்றிதழ்கள் வழங்குத்தலும் இடம்பெறும்.

முறைசாரா முறையில் சுயதொழில் செய்யும் முயற்சியாளர்களை முறைப்படுத்தும் நோக்கத்துடன் , அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்களின் அறிவு, அணுகுமுறைகள் மற்றும் திறன்களை வளர்ப்பதன் மூலம், வணிகங்களை மேம்படுத்தி , உள்ளூர் மட்டத்தில் இப்பகுதியில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதும் இன்னுமொரு கருமம் ஆகும்.

**இந்த திட்டத்தின் மூலம்.....**

- சந்தைச் சிக்கல்களைக் குறைத்தல் .
- விற்பனையை அதிகரித்தல்
- படைப்பாற்றல் மூலம் தரமான தயாரிப்புகளை உற்பத்தி செய்தல்.
- அறிவு, அணுகுமுறைகள், திறன்களை மேம்படுத்துதல்.
- வணிக வாய்ப்புகளை மேலும் அடையாளம் காணுதல்.

இலங்கையில் தற்போது தொழில் முனைவோர் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தொழில்முனைவோரின், தொழில் முனைவோர் திறன்களை வளர்ப்பதன் மூலம் தொழில்முனைவோரின் அளவு மற்றும் தரமான வளர்ச்சியை மேம்படுத்துவதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும் .

## தேவைக்கேற்ப பயிற்சி திட்டம்

இந்த திட்டம் மனிதவள மேம்பாட்டு உதவியாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரின் ஒருங்கிணைப்பின் கீழ் நான்கு நாள் திட்டமாக நடத்தப்படும். உள்ளூர் தொழில் முனைவோர் மற்றும் வேலை மேம்பாட்டு தேவைகளை அடையாளம் கண்டு , பயனாளிகளுக்கு பயிற்சியளிப்பதன் மூலம் அவர்களின் அறிவு, திறன்கள் மற்றும் அணுகுமுறைகளை வளர்ப்பது என்ற

நோக்கத்துடன் திணைக்களத்தால் செயல்படுத்தப்படும் ஒரு முதன்மை திட்டம் இதுவாகும் .

கிடைக்கக்கூடிய உள்ளூர் வளங்களிலிருந்து இப்பகுதிக்கு ஏற்ற வேலை வாய்ப்புகளை உருவாக்குவதும், அந்த வளங்களின் உச்சப்பயனைப் பெறும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகின்ற இத் திட்டமானது , கிராமப்புற வேலையின்மையைக் குறைக்க உதவும் ஒர் திட்டமாகும். வேலையற்ற இளைஞர்களின் தேவைகளுக்கு ஏற்ப, வருமான அளவை உயர்த்துவது மற்றும் சுய வேலைவாய்ப்பை அதிகரிப்பது என்ற நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகின்ற ஒரு திட்டமாகும் .

வணிகத்தில் ஈடுபட்டுள்ள பயனாளிகளின் வணிகங்களுக்கு பொருந்தும் வகையில், தொழில்நுட்ப அறிவு மற்றும் மேலாண்மை அறிவு, வணிகச் சட்டம் மற்றும் திறன் மேம்பாடு என்பவற்றுக்கு உதவி செய்தல்.

### தோட்ட(பூங்கா) அலங்காரம்

இந்த திட்டம் மனிதவள மேம்பாட்டு உதவியாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரின் ஒருங்கிணைப்பின் கீழ் பதினான்கு நாள் திட்டமாக நடத்தப்படும். இந்த திட்டம் சுய வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு திட்டமாக பிரதேச செயலக மட்டத்தில் நடத்தப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு இத்திட்டம் செயற்படுத்தப்படும். பயனாளிகள் அவர்களின் ஆக்கப்பூர்வமான கருத்துக்கள் மற்றும் அவர்களின் நிதி வலிமை ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு நேர்காணலின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

## வேலை மேம்பாட்டு திட்டங்கள்

### சுய வேலைவாய்ப்புக்கான தூண்டுதல் திட்டம்

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் சுயதொழில் துறை ஒரு சிறப்பு இடத்தைப் பிடித்துள்ளது. எனவே, வாய்ப்பு மற்றும் திறமையுள்ள இளைஞர்களை சுயதொழில் செய்ய வழிநடத்த வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. இதைச் செய்வதை நோக்கமாகக் கொண்ட ஒரு திட்டமாக இது செயற்படுகிறது. இந்த திட்டம் மனிதவள மேம்பாட்டு உதவியாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரின் ஒருங்கிணைப்பின் கீழ் ஒரு நாள் திட்டமாக நடத்தப்படும்.

### பிரதேச தொழிற்சந்தை திட்டம்

இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம் வேலை தேடுபவர்களையும் முதலாளிகளையும் ஒரே இடத்தில் அழைத்து வந்து வேலைவாய்ப்பை எளிதாக்குவதாகும். திட்டத்திற்கான பயனாளிகள் நேர்காணல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அணுகுமுறை

மேம்பாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் வேலைத்துறை சார்ந்த விழிப்புணர்வு திட்டங்கள் மூலம் பல்வேறு வேலைகளுக்கான தூண்டுதல்கள் உருவாக்கப்படுகிறது. இதன் மூலம், தனியார் துறை வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்கள் தொடர்பான விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு நேர்காணல்களுக்கு பரிந்துரைக்கப்படுவதுடன், அவ்வண்ணம் தொழில்களைப் பெற்றுக் கொண்டவர்கள் தொடர்பில் திணைக்களமானது பின்னூட்டல்களையும் மேற்கொள்கிறது.

இலங்கையில் சுமார் 58% வேலைவாய்ப்பு முறைசாரா துறையில் உள்ளது. இந்த முறைசாரா துறையை முறைப்படுத்தவும் அபிவிருத்தி செய்யவும் மூன்று நாள் தொழில்முனைவோர் மேம்பாட்டு பயிற்சி திட்டம், சுய வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு திட்டங்கள், தேவைகள் குறித்த பயிற்சி திட்டம், பிராந்திய தொழிற்சந்தை திட்டம் போன்றன திணைக்களம் நடத்தும் திட்டங்கள் ஆகும்.

## தொழில் வழிகாட்டுதல் திட்டங்கள்

மனித வளங்கள் ஒரு நாட்டின் அபிவிருத்தியின் உந்துசக்தியாகும். நம் நாட்டில் மனித வளங்கள் பற்றிய ஆய்வில், பள்ளிப்படிப்பின் பல்வேறு கட்டங்களில் திறமையற்ற தொழிலாளர்களாக இளைஞர்கள், தொழிற்படையில் சேருவதொடு, தொழிலாளர் சந்தையில் வேலை திறன் பொருத்தமின்மை, வேலை விருப்பம், தொழிலாளர் பங்களிப்பு குறைந்து வருவது, சந்தையின் புதிய போக்குகள் பற்றிய போதிய அறிவின்மை , சரியான தொழில் திட்டம் இல்லாதது, படித்த இளைஞர் சமூகத்தில் அதிக வேலையின்மை விகிதம் போன்ற பல சிக்கல்கள் உள்ளன.

நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிக்கும் பயனுள்ள மனித வளத்தை உருவாக்குவதற்கு தொழில், ஆலோசனையும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றன. எனவே, மனிதவள மற்றும் வேலைவாய்ப்புத் தினைக்கக்ளத்தின் தொழில் வழிகாட்டியாக எங்கள் நோக்கமாவது , வாடிக்கையாளர்களின் தொழில் தேர்வு மற்றும் தொழில் அபிவிருத்தியின் மூலம் நாட்டின் மனித வளங்களின் முழு திறனையும் வினைத்திறனாகவும் திறமையாகவும் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்துவதன் மூலம் சர்வதேச அளவில் பொருத்தமான மனித வளத்தை உருவாக்குவதற்கு பங்களிப்பு செய்தல் ஆகும்.

### தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை சேவைகள்

தனிநபர் மற்றும் குழு மட்டத்தில் தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்

| | | |
|---|---|---|
| திட்டத்தின் நோக்கம் | : | கல்வி மற்றும் தொழில் அபிவிருத்திக்கு திடம் அளித்தல் |
| சேவைகள் வழங்கப்படும் தினங்கள் | : | வார நாட்களில் திங்கள் மற்றும் புதன் |
| சேவைகள் வழங்கப்படும் இடங்கள் | : | அனைத்து மாவட்ட செயலகங்கள் மற்றும் |

| | | |
|---|---|---|
| வளவாளர்கள் | : | பிரதேச செயலகங்களிலும் தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்கள் / மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் / அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் |

ஒரு தொழில் உலகில் நுழையும் வாடிக்கையாளர் , அவரது தொழிலில் நுழைவது, ஈடுபடுவது, தொழில்முறை மேம்பாடு போன்ற பல்வேறு கட்டங்களில் போலவே, வாழ்க்கையின் ஒவ்வொரு முக்கியமான தருணத்திலும் தேவையான முடிவுகளை எடுக்க ஊக்கப்படுத்துதல் அவசியம். இதற்காக தனிப்பட்ட ஆலோசனை மூலம் பாரிய சேவை வழங்கப்படுகின்றது . அனைத்து மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களிலும் பணி புரிகின்ற தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்கள் / மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் / அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் குழு மற்றும் தனிப்பட்ட மட்டத்தில் வாடிக்கையாளர்களுக்கு ஆலோசனை சேவைகளை வழங்கப்படும்.

## தொழில் வழிகாட்டல் பட்டறைகள்

**வாழ்க்கைக்கான சரியான முடிவெடுப்பதற்காக க.பொ.த. (சா/த) மற்றும் க.பொ.த. (உ/த) மாணவர்களுக்கான விழிப்புணர்வு வழிகாட்டுதல் பட்டறை**

தொழில் திட்டத்தை தயாரிப்பதில் உதவுதல் மற்றும் கல்வி, தொழிற்கல்வி, தொழிற்கல்வி படிப்புகள், சுய வேலைவாய்ப்பு துறை போன்ற பல்வேறு மாற்று வழிகளைப் பற்றிய புரிதலை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்கள் மற்றும் மனிதவள மேம்பாட்டு அலுவலர்களின் பங்களிப்புடன் இடம்பெறும் ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டம் இதுவாகும். இங்கு ஒரு நிகழ்ச்சித்திட்ட பட்டறைக்கு அதிகபட்ச பயனாளிகள் எண்ணிக்கை 30 ஆகும்.

ஆண்டுக்கு க.பொ.த. (உ த) தேர்வில் சுமார் 5% மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தகுதி பெறுகின்றதோடு, மற்றுமொரு பாரிய எண்ணிக்கையிலானோர் தொழில் திட்டமின்றி திறமையற்ற தொழிலாளர்களாக தொழில் உலகிற்குள் நுழைகிறார்கள். எனவே, பாடசாலையை விட்டு விலகும் பிள்ளைகள், பாடசாலையை விட்டு வெளியேறுவதற்கு முன்பு தொழில் திட்டத்துடன் வேலை உலகில் நுழைவதற்கும், திறம்பட வேலை உலகுடன் ஒன்றித்துப் போவதற்கும் தேவையான ஆலோசனை சேவைகளை வழங்குவது அவசியம். இந்த நோக்கங்களை அடைய, சாதாரண தர மாணவர்கள் , உயர் தர மாணவர்கள் மற்றும் பாடசாலைக் கல்விக் கட்டமைப்பிற்கு வெளியே உள்ள மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டுதல் திட்டங்கள் நடத்தப்படும்.Career Me நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் திணைக்களம் கையெழுத்திட்டுள்ளதுடன் இதன் மூலம் ஆன்லைன் ஆளுமை சோதனைகளுக்கு குறிப்பாக பாடசாலை மாணவர்களுக்கு வாய்ப்பை வழங்குவதோடு, திணைக்கள

அலுவலர்களால் அந்த ஆளுமை சோதனை தகவல்களுக்கு அமைய தேவையான தொழில் வழிகாட்டுதல்கள் வழங்கப்படும்.




**" நீங்கள் அற்புதமானவர்( ஒப அசிரிமத்ய)" பட்டம் ஒன்றிற்காக எதிர்பார்ப்போடு கற்பவர்களுக்கான விழிப்புணர்வுத் திட்டம்**

இந்த பாடசாலை மாணவக் குழுக்களுக்கு மேலதிகமாக, தேசிய பல்கலைக்கழக அமைப்பில் இருக்கும் உள்வாரி மற்றும் வெளிவாரி மாணவர்களுக்கு ஆண்டுதோறும் தொழில் வழிகாட்டுதல் திட்டங்கள் நடத்தப்படுகின்றன. படித்த இளைஞர்களிடையே வேலையின்மையைக் குறைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஆண்டு தோறும் இலங்கையில் சிறந்த மாணவர்களாக பல்கலைக்கழகங்களால் பட்டப் படிப்பிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆர்வலர்கள் தங்கள் வாழ்க்கையை ஒரு எதிர்கால இலக்குடன் திட்டமிடவும், வேலை உலகத்துடன் ஆக்கப்பூர்வமாக ஒன்றித்துப் போகவும் , நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்சிக்காக அவர்களின் ஆற்றலின் முழு திறனையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டியதும் அவசியம்ஆகும் .

இந்த நோக்கத்தை மனதில் கொண்டு, தொழில் துறை வழிகாட்டல் அலுவலர்கள் மற்றும் மனித வள மேம்பாட்டு உதவியாளர்களின் உதவியுடன் பல்கலைக்கழக மாணவர்களுக்கான மூன்று நாள் கருத்திட்டமாக எமது திணைக்களம் இது செயற்படுத்தப்பட்டு வருகிறது.. இத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு செயலமர்விற்கும் எதிர்பார்க்கப்படும் பயனாளிகளின் எண்ணிக்கை 40 ஆகும்.

இது தவிர பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன.

### தொழில் வழிகாட்டுதல் குறித்து ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வுப் பட்டறை

பல்வேறு மட்டங்களில் திறமையற்ற தொழிலாளர்களாக ஆண்டுதோறும் ஏராளமான பாடசாலை மாணவர்கள் தொழிற் படையில் சேர்கின்றனர். எனவே, பாடசாலை மாணவர்களுக்கு அவர்களின் எதிர்கால தொழில்த் திட்டங்களைத் திட்டமிட உதவுவதற்காக பள்ளி நேரங்களில் அவர்களுக்கு தொழில் வழிகாட்டுதலும் ஆலோசனையும் வழங்குவது அவசியம் ஆகும் . இது பாடசாலையில் இருந்து தொழில் உலகிற்கு நுழையும் பிள்ளைகளை தொழில் உலகிற்கு திறம்பட உள்வாங்க உதவும். மேற்கூறிய நோக்கத்தை அடைய இத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இது தொழில்துறை வழிகாட்டல் அலுவலர்கள் மற்றும் மனித வள மேம்பாட்டு உதவியாளர்களின் உதவியுடன் நடத்தப்படும் இரண்டு நாள் செயலமர்வு ஆகும் . இத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு செயலமர்விற்கும் எதிர்பார்க்கப்படும் பயனாளிகளின் எண்ணிக்கை 40 ஆகும்.

### பெற்றோருக்கான தொழில் வழிகாட்டல் குறித்த விழிப்புணர்வுப் பட்டறைகள்

மாறிவரும் இந்த சமூக-பொருளாதார அமைப்பில் , தங்கள் குழந்தைகளை சரியான திசையில் வழிநடத்துவதும், நாட்டிற்கு ஒரு சிறந்த குடிமகனை உருவாக்குவதும் பெற்றோரின் பொறுப்பாகும். எனவே, மாறிவரும் சமூக-பொருளாதார அமைப்பில் , கல்வித்துறை மற்றும் தொழில்முறை துறைகள் மட்டுமல்லாமல், தங்கள் குழந்தைகளின் சரியான வளர்ப்பு முறையையும் பெற்றோர்கள் அறிந்திருப்பது அவசியம் ஆகின்றது . எனவே, பிள்ளைகளின் திறமைகளை இனங்காண்பதும், மாறிவரும் கல்வித்துறை மற்றும் வேலைவாய்ப்பு துறைகள் தொடர்பாகவும், மற்றும் பிள்ளைகளை வளர்க்கும் முறைகள் குறித்தும் அவர்களின் அறிவைப் பயிற்றுவிப்பது மற்றும் புதுப்பிப்பது காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

இது பிள்ளையின் எதிர்காலத் தொழில் அபிவிருத்திக்காக நேரடியாக செல்வாக்கு செலுத்தும் . இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் முக்கிய நோக்கம் ஆகும் . இது தொழில்துறை வழிகாட்டல் அலுவலர்கள் மற்றும் மனித வள மேம்பாட்டு உதவியாளர்களின் உதவியுடன் நடத்தப்படும் ஒரு நாள் செயலமர்வு ஆகும் . இத் திட்டத்தின் கீழ் ஒரு செயலமர்விற்கு எதிர்பார்க்கப்படும் பயனாளிகளின் எண்ணிக்கை 50 ஆகும்.

### தொழில் திட்டங்களை வெற்றி கொள்ளல் - வேலையற்ற இளைஞர்களுக்கானது

பாடசாலைக் கல்விக்குப் பிறகு, ஏராளமான இளைஞர் யுவதிகள் முறையான தொழில் திட்டம் இல்லாமல், வேலைவாய்ப்பு இல்லாமல் தங்கள் நேரத்தை வீணாகச்

செலவிடுவதோடு , இது நாட்டின் சமூக-பொருளாதார அபிவிருத்திக்கு தடையாக உள்ளதுடன் பல்வேறுபட்ட நெருக்கடிகளை உருவாக்குவதற்கும் ஏதுவாக அமைகின்றது. எனவே, எதிர்கால இலக்குடன் வாழ்க்கையைத் திட்டமிடவும், ஆக்கப்பூர்வமாக தொழில் உலகுடன் ஒன்றித்துப் போகவும் தேவையான வழிகாட்டுதல்களையும் ஆலோசனைகளையும் வழங்குவது அவசியம் ஆகும் . இது தொழில்துறை வழிகாட்டல் அலுவலர்கள் மற்றும் மனித வள மேம்பாட்டு உதவியாளர்களின் உதவியுடன் நடத்தப்படும் ஒரு நாள் செயலமர்வு ஆகும் . இத் திட்டத்தின் கீழ் ஒரு செயலமர்விற்கு எதிர்பார்க்கப்படும் பயனாளிகளின் எண்ணிக்கை 30 ஆகும்.

## தொழில் வழிகாட்டல் வெளியீடுகள்

### ஹசர தொழில் வழிகாட்டல் கல்வி மற்றும் தகவல் இதழ்

| | | |
|---|---|---|
| திட்டத்தின் நோக்கம் | : | தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை தொடர்பான அறிவை சமூகமயமாக்குவதன் மூலம் இலக்கு சமூகத்தை மேம்படுத்துதல் |
| காலம் | : | ஆண்டுக்கு 4 இதழ்கள். |
| தொகுப்பு | : | தொழில் வழிகாட்டல் அலுவலர்கள் |
| இலக்கக் குழு | : | பாடசாலை மாணவர்கள் , வேலையற்ற இளைஞர் யுவதிகள் , தொழில் வளர்ச்சி தேடுபவர்கள், தொழில் வல்லுநர்கள் |

நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிக்கும் ஆற்றலுடனும், அறிவு மற்றும் திறன் மனப்பான்மையுடனும் கூடிய ஒரு பணியாளர்களை உருவாக்குவதில் எழுத்துருவிலான பத்திரிகைகள், செய்தித்தாள்கள் மற்றும் ஆடியோ காட்சி ஊடகங்கள், முக்கிய பங்கு வகிக்கின்றன. அதன்படி, நம் நாட்டிற்கு இன்றும் ஒரு புதுமையான கருத்தாக விளங்கும் தொழில் வழிகாட்டுதலையும் ஆலோசனையையும் சமூகமயமாக்குவது மூலம் இளைஞர்களின் திறனை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்திக் கொள்வதும், நாட்டின் அபிவிருத்திக்குப் பொருத்தமான அறிவு, திறன்கள் மற்றும் அணுகுமுறைகளுடன் கூடிய தொழிற்படை ஒன்றை உருவாக்குவதும் அவசியம் ஆகும் .

இந்த நோக்கத்திற்காக “ஹசர” தொழில் வழிகாட்டுதல்கள் மற்றும் கல்வி வெளியீடுகள் 2000 ஆம் ஆண்டிலிருந்து திணைக்களத்தால் வெளியிடப்பட்டு வருவதுடன் , மேலும் இந்த விஷயத்தில் சிங்கள மொழியில் வெளியிடப்பட்ட முதல் இதழும் இதுவாகும் . இந்த பருவ வெளியீடானது பாடசாலைகள் , பல்கலைக்கழகங்கள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் நகர சபை நூலகங்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இப் பத்திரிகைக்கான கட்டுரைகளைத் தயாரிப்பது, இத் துறையில்

நிபுணத்துவம் பெற்ற அதிகாரிகளாலும், தொழில் வழிகாட்டுதல் விடய நிபுணர்களாலும் மேலும் நேர்காணல்களை நடத்துவதன் மூலமும் தயாரிக்கப்படுகின்றது. திணைக்களத்தின் கருமங்களுடன் பின்வரும் தலைப்புகளில் கட்டுரைகளை வெளியிடுவதில் குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்படும்.

**தொழில் வழிகாட்டுதல் தொடர்பான கட்டுரைகள்**

I. வேலைவாய்ப்பு உலகின் புதிய போக்குகள்
II. தொழிற் பாதைகள் மற்றும் தொழில்முறை தகுதிகள் பற்றிய விவரங்கள்
III. வெற்றிகரமான தொழில் வல்லுநர்களாக நாட்டில் புகழ் பெற்றவர்களுடன் நேர்காணல்களை மேற்கொண்டு அதன் அடிப்படையாகக் கொண்ட கட்டுரைகள்
IV. பாடசாலை மாணவர்களுக்குத் தொழில் வழிகாட்டுதல் வழங்குவது தொடர்பான கட்டுரைகள்

### 1.5.4 மனிதவளத் திட்டமிடல் , மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி பிரிவு

சர்வதேச தொழிலாளர் சந்தை வலையமைப்பில் இலங்கையின் பங்களிப்புத் தொடர்பாக திறம்பட மற்றும் பயனுள்ள தீர்மானங்களை எடுப்பதற்காகவும், கொள்கை வகுத்தல் நடவடிக்கைக்காகவும், கல்வித் துறையில் கல்வித் திட்டங்கள், பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையில் வளவாளர்கள தொடர்பாகவும் தேவையான தொழிலாளர் சந்தை தகவல்களை அனைத்து பங்குதாரர்களுக்கும் வழங்குவதை எளிதாக்குவதற்காக உருவாக்கப்பட்ட பிரிவாகும்.

இந்தப் பிரிவு 03 முக்கிய அலகுகளின் கீழ் செயல்படுகிறது

- ☆ தொழிலாளர் சந்தை தகவல் பிரிவு
- ☆ தேசிய வேலைவாய்ப்பு மையம்
- ☆ தேசிய மனித வளங்கள் மற்றும் வேலைவாய்ப்பு கொள்கை செயல்பாட்டு பிரிவு

### <u>தொழிலாளர்(ஊழியர்) சந்தை தகவல் பிரிவு</u>

தொழிலாளர் சந்தை தகவல் சேகரிப்பில், விரைவாக இயைபாக்கம் அடையக் கூடிய திறமையான மனித வளங்களுக்காக, தொழிலாளர் சந்தை தேவையை கவனமாக கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்வது அவசியமாகும்.. இந்த பிரிவின் ஊடாக தொழிலாளர் சந்தை தகவல்களை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் விநியோகித்தல் ஆகியன இடம்பெறுகிறது. தொழிலாளர் சந்தை தகவல் பிரிவானது, இலங்கையின் தற்போதைய காலத்தின் தேவை கருதியும் மற்றும் அபிவிருத்தித்

தேவைகளுக்கு ஏற்பவும் ஊழியச் சந்தை ஆராய்ச்சி மற்றும் கணக்கெடுப்புகளையும் நடத்துதல், ஊழியர் கேள்வி மற்றும் நிரம்பல் தொடர்பாக ஆராய்தல் மற்றும் அது தொடர்பான தகவல்களை வழங்குதல் போன்ற காரியங்களைச் செய்து வருகிறது.

தொழிலாளர் (ஊழியர்) சந்தை தொடர்பான தகவல் வெளியீடு மற்றும் பாடசாலை அடிப்படையிலான தரவு கையேடு என்பன இதன் மூலம் வெளியிடப்படுகிறது.





**2019 ஆம் ஆண்டில் தொழிலாளர் (ஊழியர்) சந்தை தகவல் பிரிவு மூலம் முன்மொழியப்பட்ட திட்டங்கள்**

**01. தொழிலாளர் (ஊழியர்) சந்தை தகவல் இதழ் ( Annual LMI Bulletin)**

தொழிலாளர்(ஊழியர்) சந்தை தகவல் வெளியீடானது , ஊழியர் கேள்வி , ஊழியர் நிரம்பல் , வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் உற்பத்தித்திறன் பற்றிய தகவல்களை உள்ளடக்கியுள்ளது. மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் ஊழியக் கணக்கெடுப்பு, இலங்கை மத்திய வங்கியின் அறிக்கை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அறிக்கைகள் மற்றும் தரவுகளின் அடிப்படையில் இவ்வெளியீட்டுக்கான தகவல்கள் பெறப்பட்டுள்ளன. தொழிலாளர் சந்தை நடவடிக்கைகள் தொடர்பான தற்போதைய தரவுகளை குறித்த பயனாளிகளுக்கும் தொழில் பயிற்சி பெறுவோர்களுக்கும் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் வழங்குவதே இதன் நோக்கம் ஆகும். அச்சடிக்கப்பட்ட 1500 பிரதிகள் பிரதேச மற்றும் மாவட்ட அலுவலகங்களில் தொழில்துறை வழிகாட்டுதல் உத்தியோகத்தர்கள், மனித வள மேம்பாட்டு அலுவலர்கள்,பொது நூலகங்கள், பல்கலைகழக மாணவர்கள், ஆகியோருக்கு பிரித்து வழங்கப்பட்டுக் கொண்டு வருகிறது.

**02. தொழிலாளர் சந்தை தகவல்களைக் கொண்ட DVD களை உருவாக்குதல்**

இத் திணைக்களத்தின் கள உத்தியோகத்தர்களுக்கு , இலங்கலையின் ஊழியச் சந்தை தொடர்பான புதுப்பிக்கப்பட்ட தகவல்களை வழங்குதல் அத்தியாவசியமான

போதிலும், அத்தகவல்களைப் பெறுதல் தொடர்பாக பல்வேறு பட்ட இடையூறுகள் இருக்கின்றமையாலும் மற்றும் ஊழியர் சந்தை புதுப்பிப்புகள் குறித்து சில அலுவலர்களின் அறியாமை காரணமாகவும் , தொழிலாளர் சந்தை தகவல்களைக் கொண்ட DVD களைத் தயாரிக்க முடிவு செய்யப்பட்டது.

550 குறுந்தகடுகள் தயாரிக்கப்பட்டு தலைமை அலுவலக உத்தியோகத்தர்கள் , பிரதேச மற்றும் மாவட்ட அலுவலகங்களில் தொழில் வழிகாட்டல் அலுவலர்கள் , மனித வள மேம்பாட்டு அலுவலர்கள் ஆகியோருக்கு விநியோகிக்கப்பட்டன.

### 03. மாதாந்த ஊழியர் சந்தை வெளியீடு (Monthly LMI News Letters)

தேசிய மற்றும் சர்வதேச ஊழியர் சந்தையில் நுழையத் தேவையான திறன்கள், பயிற்சி போன்றவற்றைப் பற்றிய பிரதேச மற்றும் மாவட்ட அலுவலகங்களில் உள்ள தொழில் வழிகாட்டுதல் அலுவலர்கள்,மனித வள மேம்பாட்டு அலுவலர்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு, மற்றும் இதன் மூலம் அவர்களின் செயலமர்வுகளில் பங்கேற்கும் மாணவர்கள், வேலையில்லாதவர்கள் ஆகியோருக்கு அறிவூட்டுவதற்கு தேவையான தகவல்களை உள்ளடக்கி உள்ளது. மாதாந்த ஊழியர் சந்தை தொடர்பான வெளியீடானது நான்கு தலைப்புக்களின் கீழ் ஒன்றில் 300 வீதம் 1200 துண்டுகள் அச்சிடப்பட்டு பிரதேச மற்றும் மாவட்ட அலுவலகங்களில் உள்ள தொழில் வழிகாட்டுதல் அலுவலர்கள், மனித வள மேம்பாட்டு அலுவலர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 04. துறை ஆய்வுகள் (Sectorial Studies)

இலங்கையின் ஊழியச் சந்தையில் புதுப்பித்த தகவல்களை வழங்குவதற்காக தேவையான தரவுகளை உள்ளடக்கி, ஊழியச் சந்தை தகவல் பிரிவின் அலுவலர்களால் மாதாந்தம் ஒரு முறை ஒவ்வொரு அலுவலராலும் தனித் தனியாகத் தயாரிக்கப்படுகின்ற 16 மாதாந்த அறிக்கைகள் வலைத்தளத்தில் வெளியிடப்படுகின்றது.

### 05. சமூக பொருளாதார தரவு கையேடு

பாடசாலைக்கல்வியினை வெற்றிகரமாகத் தாண்டுவதற்கும் அதன் பின்னர் உயர் கல்வியைத் தொடர விரும்பும் பிள்ளைகளுக்கு உதவுவதோடு , அதே நேரத்தில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சமூக-பொருளாதார முன்னேற்றங்கள், குறிப்பாக ஊழியச் சந்தை பற்றிய அடிப்படை புரிதலை வழங்குவதையும் அடிப்படையாகக் கொண்டு சமூக-பொருளாதார தரவு கையேடு ஆண்டுதோறும் வெளியிடப்படுகிறது,. இக்கையேடு வெளியிடப்பட்டதும் ,இக் கையேட்டை மாவட்ட செயலகங்களால் தீவு

முழுவதும் உள்ள 7674 பாடசாலைகளுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

### 05. ஊழியச் சந்தை தகவல் தொகுதியின் அபிவிருத்தி

ஆன்லைன் (Online) மூலம் வேலை வாய்ப்பு இணக்கம் செய்தல், தொழில் வழிகாட்டுதல் மற்றும் பயிற்சியளித்தல் போன்றவற்றிக்காக ஓர் ஆன்லைன் (Online) வேலைவாய்ப்பு சேவை தொகுதியை திணைக்களம் பராமரிக்கின்றதுடன், இதன் மூலம் வேலை தேடும் இளைஞர் யுவதிகளின் அதிக பங்களிப்பை பெறுவதுடன் வேலையின்மையைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2019 ஆம் ஆண்டில், சர்வதேச தொழிலாளர் அமைப்பின் நிதி உதவியுடன், இந்த ஆன்லைன் முறையைப் புதுப்பிக்க ஒரு சிறப்புத் திட்டம் தொடங்கப்பட்டதுடன் Freelancer மற்றும் E-PES ,Mobile Apps ஆகியவற்றின் மேம்பாட்டு வேலைகள் பிரதானமாக செய்யப்பட்டன

### <u>தேசிய மனித வள மற்றும் வேலைவாய்ப்பு கொள்கைப் பிரிவு</u>

இப் பிரிவு மனிதவளத் திட்டமிடல் , மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி பிரிவின் கீழ் செயல்படுகிறது. 2017 ஆம் ஆண்டில் தேசிய மனித வளம் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றம் தற்போதைய அரசாங்கத்தின் நடுத்தர கால அபிவிருத்திக் கொள்கைக் கட்டமைப்பிற்கு ஏற்ப திருத்தியமைக்கப்பட்டது. திருத்தப்பட்ட கொள்கைக்கு அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டுள்ளதுடன் அனைத்து தொடர்புடைய அமைச்சுக்களினதும் நடுத்தர கால செயற்திட்டங்களின்படி கொள்கையை செயற்படுத்துவது குறித்த ஒருங்கிணைப்பு, முன்னேற்ற மதிப்பீடு மற்றும் அறிக்கையிடுதல் என்பன இப்பிரிவின் கீழ் செய்யப்பட்டு வருகின்றது.. இந்தக் கொள்கையை அமுல்படுத்துவதற்கு, தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு மற்றும் தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், மறுவாழ்வு, வடக்கு மாகாண மேம்பாடு மற்றும்


இளைஞர் விவகாரங்கள் அமைச்சு ஆகிய இரு அமைச்சுகளும் இணைந்து தலைமை தாங்கின.

**<u>தேசிய தொழில் மத்திய நிலையம்</u>**

இப்பிரிவின் ஊடாக மனிதவலு திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாட்டின் 25 மாவட்டங்களிலும் தொழில் மத்திய நிலையங்கள் (Job Center / PES) செயற்படுகின்றன. தேசிய தொழில் மத்திய நிலையமானது பத்தரமுல்லை அலுவலக வளாகத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

## தொழில் மத்திய நிலைய வலையமைப்பு










பிரதான அலுவலம்
9ஆம் மாடி
செத்திசிறிபாய இரண்டாம் கட்டம்
பத்தரமுல்லை.

**மாவட்ட தொழில் நிலையத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளாவன:**

- தொழில்வாய்ப்பைத் தேடுவோரை பதிவு செய்தல்.
- வெற்றிடங்கள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்
- நிறுவனங்களிலுள்ள பதவி வெற்றிடங்களை விசாரித்தறிவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- தொழில்வாய்ப்பை எதிர்பார்த்திருப்போரது தொழில் வெற்றிடம் தொடர்பில் அட்டவணையொன்றைத் தயாரித்தல்.

- நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் தொழில் எதிர்பார்த்திருப்போரது தகைமைகளை உறுதிப்படுத்துதல்.
- தொழில்களை பொருத்துதல் மற்றும் நேர்முகப்பரீட்சைக்கு அனுப்புதல்.
- தொழில்களில் ஈடுபடுத்துதல் மற்றும் பின்னூட்டல்
- தொழில் வழிகாட்டல் சேவைகளை வழங்குதல்.
- பயிற்சிகளுக்கான வசதிகளை வழங்குதல்.
- தொழில் நிலைமைகள் தொடர்பில் புள்ளிவிபரங்களை சேகரித்தல் மற்றும் அவற்றை வெளியிடுதல்.
- வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளுக்கு வழிகாட்டுதல்.
- மாவட்ட தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்கமைத்து நடாத்துதல்.

## தொழில் மத்திய நிலையத்தின் செயற்பாடுகள்






தொழில் எதிர்பார்த்திருப்போர் பல முறைகள் ஊடாக பதிவு செய்யப்படுகின்றனர். பிரதேச மட்டத்திலான மனிதவள அபிவிருத்தி உதவியாளர்கள் ஊடாகவும் தொழில் சந்தை, தொழில் மத்திய நிலையத்தின் ஊடாகவும் வழங்கப்படுகின்ற தகவல்கள் ஊடாக இத்தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இதன் கீழ் விண்ணப்பதாரிகளை அறிவுறுத்தும் அடிப்படை நிகழச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன.


திணைக்களத்தின் இணையத்தளத்திற்கு ஒன்லைன் தொழில் சேவைகளை வழங்கும் இணையத்தள பிரவேசம் ஊடாகவும் விண்ணப்பதாரர்கள் பதிவு செய்துகொள்ள முடியும் என்பதுடன் சேவை வழங்குனர்களும் இதில் பதிவு செய்து தமது தேவைகளுக்கேற்ப வெற்றிடங்களுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளை தெரிவு செய்துகொள்ள முடியும். .(www.dome.gov.lk)

அவ்வாறே தொழிலை எதிர்பார்த்திருப்போருக்கு தொழில் வழிகாட்டல், பயிற்சிகளுக்கு அனுப்புதல், Career Me நிறுவனத்தினால் வசதிகள் வழங்கப்படுகின்ற ஆளுமை நிகழ்ச்சித்திட்டங்களில் இலவசமாகப் பங்குபற்றுவதற்குத் தேவையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு புறம்பாக பல்வேறு திறன்களைக் கொண்ட நிபுணர்களை திணைக்களத்தின் இணையத்தளத்தின் ஊடாக பதிவு செய்து கொள்வதற்கும் இச்சேவைகளை தமது பிரதேசத்தின் அடிப்படையில் சேவை வழங்குனர்களை தெரிவு செய்து கொள்ளும் வசதியும் வழங்கப்பட்டுள்ளது.





மேலே குறிப்பிடப்பட்ட இச்சேவையை கையக்கத் தொலைபேசியின் செயலி (Mobile App.) ஒன்றின் ஊடாக பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் மென்பொருளொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியுதவிகள் சர்வதேச தொழில் அமைப்பினால் (ILO) வழங்கப்பட்டுள்ளன.







**தேசிய தொழில் மத்திய நிலைய ,ம் ஆண்டில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

### 01. தொழில் எதிர்பார்த்திருப்போரை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள்

பிரதேச செயலக மட்டத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள தொழில் எதிர்ப்பார்த்திருப்போரை அறிவுறுத்துவதன் ஊடாக அவர்கள் விரும்பிய தொழில் துறையை அறிந்து கொள்வதற்கு அல்லது தேவையான பயிற்சி மற்றும் ஆலோசனைகளுக்கு உட்படுத்துதல் இந்நிகழச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

### 02. மாவட்ட தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டங்கள்

மாவட்டத்திற்குள் உள்ள தொழில் எதிர்பார்த்திருப்போருக்காக ஒழுங்கு செய்யப்பட வேண்டிய இந்நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக தொழில் வழங்கும் நிறுவனங்கள் மற்றும் தொழில் எதிர்பார்த்திருப்போரை ஒரே இடத்தில் சந்திப்பதற்கு வாய்ப்பளிப்பதன் ஊடாக பொருத்தமான தொழில் வாய்ப்புகளை அறிந்து கொள்வதற்கும், தகைமையுள்ள இளைஞர்களை கவர்ந்து கொள்வதற்கும் வழியேற்படுகின்றது. அதனடிப்படையில் 2019ஆம் ஆண்டில் கேகாலை, கண்டி, காலி, மாத்தறை, குருணாகல், கிளிநொச்சி, பொலனறுவை மற்றும் மொணறாகலை மாவட்டங்களில் தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

### 03. வர்த்தக செயலமர்வுகள்

மாவட்ட தொழில் மத்திய நிலையங்களை மையமாகக் கொண்டு அம்மாவட்டங்களிலுள்ள தொழில் வழங்குனர்களுக்கான செயலமர்வுகளை ஒழுங்கு செய்து திணைக்களத்தின் சேவைகளை அறிமுகப்படுத்தும் ஒரு நிகழ்ச்சித்திட்டமாகும். அதனடிப்படையில் 2019ஆம் ஆண்டில் கேகாலை, கண்டி, காலி மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

### 04. தொழில் எதிர்பார்த்திருப்போரை பதிவு செய்தல்

மாவட்டத்தில் வசிக்கின்ற வேலையற்ற நபர்களுள் தொழிலை எதிர்பார்த்திருப்போரை பதிவு செய்து தரவுத் தளமொன்றை அமைப்பதே இச்செயற்பாடாகும். ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் உள்ள தொழில் எதிர்பார்த்திருப்போரை திணைக்களத்தின்

இணையத்தளத்தில் பதிவு செய்தல் பிரதேச செயலகங்களில் சேவையாற்றுகின்ற மனிதவள உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளாகும்.

### 05. தொழில் வெற்றிடங்களை பதிவு செய்தல்.

இதனூடாக தனியார் மற்றும் பகுதி தனியார் துறைகளின் பதவி வெற்றிடங்கள் தொடர்பான தரவுத் தளமொன்று நிருமாணிக்கப்படுகின்றன. மாவட்டச் செயலகங்களில் இணைப்புச் செய்யப்பட்டுள்ளவர்கள் மாவட்டச் செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களை பதிவு செய்யும் இலக்கை பூர்த்தி செய்தல் வேண்டும். மாவட்ட மட்டத்தில் பரந்து காணப்படுகின்ற தொழில் வழங்கும் நிறுவனங்கள் மற்றும் அவர்களது பதவி வெற்றிடங்கள் இணையத்தளத்தில் இத்தகைய விதத்தில் பதிவேற்றப்படும். அப்பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக பிரதேச செயலகங்கள் ஊடாக பொருத்தப்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

### 06. தொழிலில் ஈடுபடுத்துதல்

பிரதேச செயலக மட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்ட தொழில் எதிர்பார்த்திருப்போரை இணையத்தளத்தில் காணப்படும் வெற்றிடங்களுக்கமைய பொருத்தம் செய்து உரிய விதத்தில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களால் தொழிலில் ஈடுபடுத்தப்படுவர்.

### 07. விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

I. தொழில் மற்றும் வேலைவாய்ப்பு கொள்கை வகுப்பு மற்றும் ஆலோசனைச் சேவைகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக இலங்கை மற்றும் தென்கொரியாவிற்கிடையில் 2019.07.15ஆந் திகதி உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது.







## <u>திணைக்களத்தின் ஊடாக நடாத்தப்பட்ட பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள்</u>

தொழில் உருவாக்கல், மேம்படுத்தல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவின் ஊடாக நடாத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட சில புகைப்படங்கள்.

ஆசிரியர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் பட்டதாரிகளை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள்

கேகாலை கொழும்பு பல்கலைக்கழகம்





தேவைக்கேற்ப பயிற்சிகளை நடாத்துதல் பட்டதாரிகளை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள்

ஊர்காவற்றுரை பிரதேச செயலகம் யாழ்ப்பான பல்கலைக்கழகம்





க.பொ.த.(உ.த) நிகழ்ச்சித்திட்டம்
பெல்மடுல்ல தர்மாலோக மகா வித்தியாலயம்

க.பொ.த.(சா.த) நிகழ்ச்சித்திட்டம்
கல்கமுவ வள்ளிநாயக்க கல்லூரி





ஆசிரியர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

குருணாகல் கெட்டுவான மஹிந்த கல்லூரி



தொழில் எதிர்பார்த்திருப்போரை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள்
சியம்பலாண்டுவ பிரதேச செயலகம்



தொழில் எதிர்பார்த்திருப்போரை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

தனமல்வில பிரதேச செயலகம்



மொனறாகல மாவட்டச் செயலகம்




பெற்றோரை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

பண்டாரகம பிரதேச செயலகம்



முயற்சியாண்மை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

மாவனல்ல பிரதேச செயலகம்



தேவைக்கேற்ப பயிற்சித் திட்டங்கள்

மாவனல்ல பிரதேச செயலகம்



முயற்சியாண்மை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
மாவனல்ல பிரதேச செயலகம்



முயற்சியாண்மை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
எலஹெர பிரதேச செயலகம்






8.2 மாவட்ட தொழில் மத்திய நிலையத்தின் ஊடாக நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தினூடாக பெற்றுக் கொள்ளப்பட்ட புகைப்படங்கள்

காலி மாவட்ட தொழில் சந்தை









02. கேகாலை மாவட்ட தொழிற்சந்தை





கிளிநொச்சி மாவட்ட தொழிற்சந்தை





லக் ரெகியா ஹரசர நிகழச்சித்திட்டம்









## 1.6 வெளிநாட்டு நிதியுதவி பெறுகின்ற கருத்திட்டங்களது தகவல்கள்

நேரடியாக வெளிநாட்டு உதவிகள் பெறுகின்ற கருத்திட்டங்கள் எமது திணைக்களத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

# அத்தியாயம் 02

# முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்குகை

## 2.1 முன்னேற்றம்

| | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடுகள் | 2019 ஆம் ஆண்டிற்கான இலக்கு | | 2019/01/01 திகதி தொடக்கம் 2019/12/31 வரையான முன்னேற்றம் | | பயனாளிகளது எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | பௌதீக | நிதி (ரூ.மில்) | பௌதீக | நிதி (ரூ.மில்) | |
| **தொழில் உருவாக்கல், மேம்படுத்தல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு** | | | | | | |
| 1 | க.பொ.த.சா.த. தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் | 1865 | 1.100 | 2023 | 1.180 | 58,455 |
| 2 | க.பொ.த.உ.த. தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் | 1328 | 1.240 | 1289 | 1.304 | 40,108 |
| 3 | சுயதொழில் ஊக்கப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் | 311 | 0.777 | 407 | 0.714 | 14,329 |
| 4 | தொழில் சவால்களை வெற்றி கொள்ளுதல் | 50 | 0.275 | 53 | 0.227 | 2,108 |
| 5 | பட்டதாரிகளுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் உள்ளக / வெளியக | 15 | 0.567 | 11 | 0.408 | 459 |
| 6 | ஆசிரியர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | 15 | 0.428 | 24 | 0.379 | 901 |
| 7 | பெற்றோர் அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டம் | 311 | 0.817 | 435 | 0.808 | 20,437 |
| 8 | ஹுரசர சஞ்சிகையை அச்சிடல் | 2 | 0.360 | 2 | 0.344 | - |
| 9 | முயற்சியான்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம். | 20 | 0.455 | 26 | 0.485 | 798 |
| 10 | பிரதேச தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டம் | 120 | 0.840 | 129 | 1.038 | 13,943 |
| 11 | தேவைக்கேற்ப பயிற்சித்திட்டங்கள் | 200 | 1.400 | 172 | 0.972 | 4,874 |
| 12 | வீட்டுத்தோட்ட அலங்காரங்கள் | 3 | 0.110 | 3 | 0.100 | 103 |
| 13 | லக் ரெகியா ஹுரசர நிகழ்ச்சித்திட்டம் - I | 100% | 2.000 | 100% | 1.703 | - |
| | லக் ரெகியா ஹுரசர நிகழ்ச்சித்திட்டம் - சுவிசி செயற்றிட்டம் | 100% | 1.000 | 100% | 0.609 | - |
| **மனிதவலு திட்டமிடல் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி பிரிவு** | | | | | | |
| 14 | துறைசார் கற்கைகள் - Sectoral Studies | 26 | 0.400 | 23 | 0.087 | - |
| 15 | மாதாந்த சஞ்சிகைகள் - Monthly LMI Newsletter | 5 | 0.200 | 4 | 0.114 | - |
| 16 | ஊழியச் சந்தை தகவல் இறுவட்டு (bulletin CD) | 100ம | 0.130 | 100% | 0.085 | - |
| 17 | ஊழியச் சந்தை தகவல் சஞ்சிகை Annual LMI Bulletine | 100ம | 0.200 | 100% | 0.202 | - |
| 18 | ஊழியச் சந்தை மாநாடு (LMI forum) | 100ம | 0.030 | 45% | - | - |
| 19 | சமூக பொருளாதார தரவு கையேடு (Socio - Economic Data Hand book) | 100ம | 1.000 | 100% | 0.795 | - |
| 20 | Development of LMIS | 100ம | | 85% | | |

| | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடுகள் | 2019 ஆம் ஆண்டிற்கான இலக்கு | | 2019/01/01 திகதி தொடக்கம் 2019/12/31 வரையான முன்னேற்றம் | | பயனாளிகளது எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | பௌதீக | நிதி (ரூ.மில்) | பௌதீக | நிதி (ரூ.மில்) | |
| | | | 1.000 | | 0.873 | - |
| 21 | Periodic Reports on demand | 100மூ | 0.040 | 20% | - | - |
| **<u>பொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலையம்</u>** | | | | | | |
| 22 | மாவட்ட தொழில் மத்திய நிலையங்களை விருத்தி செய்தல் மற்றும் ஆரம்பித்தல். | 3 | 0.750 | 1 | 0.232 | - |
| 23 | மாவட்ட தொழில் சந்தைகளை நடாத்துதல் | 12 | 1.750 | 11 | 1.891 | 11,935 |
| 24 | தொழில் எதிர்பார்த்திருப்போரை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 300 | 1.500 | 408 | 1.357 | 16,865 |
| 25 | பொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலையங்களை பேனிச் செல்லுதல். | | | | | |
| | 1.தொழில் வின்னப்பதாரிகளை பதிவு செய்தல். | 100,000 | | 90,550 | | 90,550 |
| | 2. தொழில் வெற்றிடங்களை பதிவு செய்தல். | 39,600 | 0.450 | 38,689 | 0.644 | 38,689 |
| | 3.தொழில்களை பொருத்துதல். | | | 31,343 | | 31,343 |
| | 4.தொழில்களில் ஈடுபடுத்துதல். | 27,580 | | 14,832 | | 14,832 |
| 26 | தொழில் தருனர்களுடன் கலந்துரையாடுதல் - Conducting of Employer Forums | 8 | 0.400 | 4 | 0.155 | 159 |
| 27 | WAPES Membership – உலக மக்கள் தொழில் சேவை சங்கம் | 100மூ | 0.650 | | 0.503 | - |
| 28 | தேவைக்கேற்ப நடாத்துகின்ற விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் Tailormade Programmes for Companies and Job Seekers | 25 | 0.500 | 14 | 0.586 | 515 |
| **<u>முகாமைத்துவ தகவல் கட்டமைப்பு - MIS</u>** | | | | | | |
| 29 | தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களிலுள்ள வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மடிக்கனனிகள் வழங்குதல். | 100மூ | 3.000 | 100மூ | 3.000 | - |
| **<u>சுனிசி செயற்றிட்டம்</u>** | | | | | | |
| 30 | பூசைக்கு பயன்படுத்தப்படுகின்ற பூக்களை வளர்த்தல், பூமாலைகளை கட்டுதல் விற்பனை செய்யும் கருத்திட்டம் - கதிர்காமம் | 100% | 1.230 | 80% | 0.748 | 266 |
| 31 | தேசிய மனிதவள தொழில் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல் - தகவல் தொழிநுட்ப கட்டமைப்பை பராமரித்தல். | 100% | 0.530 | 100% | 0.513 | - |
| 32 | கன்டி மாவட்ட தொழில் மத்திய நிலையத்தை தாபித்தல். | 100% | 0.970 | 100% | 0.949 | - |
| 33 | கையேடுகளை அச்சிடுதல். | 100% | 0.641 | 100% | 0.483 | - |

தொழிலில் ஈடுபடுத்துதல் - 2019/12/31 ஆந் திகதியில் முன்னேற்றம்

| | மாவட்டம் | நேரடி தொழிலில் ஈடபடுத்துதல் | | சுயதொழிலாளர்கள் / முயற்சியளார்களை உருவாக்குதல். |
|---|---|---|---|---|
| | | மாவட்ட தொழில் மத்திய நிலையம் ஊடாக | பிரதேச செயலக மட்டத்தில் | |
| 1 | கொழும்பு | 765 | 384 | 212 |
| 2 | கம்பஹா | 332 | 406 | 72 |
| 3 | களுத்துறை | 304 | 603 | 221 |
| 4 | கண்டி | 374 | 403 | 97 |
| 5 | மாத்தளை | 121 | 290 | 31 |
| 6 | நுவரேலியா | 42 | 135 | 51 |
| 7 | காலி | 250 | 344 | 165 |
| 8 | மாத்தறை | 422 | 475 | 140 |
| 9 | அம்பாந்தோட்டை | 375 | 494 | 52 |
| 10 | யாழ்ப்பாணம் | 475 | 449 | 155 |
| 11 | மன்னார் | 44 | 139 | 77 |
| 12 | வவுனியா | 122 | 62 | 27 |
| 13 | முல்லைத்தீவு | 4 | - | 11 |
| 14 | கிளிநொச்சி | 381 | 91 | 50 |
| 15 | மட்டக்களப்பு | 107 | 951 | 303 |
| 16 | அம்பாறை | 62 | 345 | 228 |
| 17 | திருகோணமலை | 109 | 67 | 91 |
| 18 | குருணாகல் | 603 | 1095 | 317 |
| 19 | புத்தளம் | 156 | 400 | 71 |
| 20 | அநுராதபுரம் | 227 | 130 | 198 |
| 21 | பொலனறுவை | 125 | 43 | 22 |
| 22 | பதுளை | 528 | 257 | 48 |
| 23 | மொணறாகலை | 66 | 120 | 35 |
| 24 | இரத்தினபுரி | 230 | 422 | 113 |
| 25 | கேகாலை | 135 | 368 | 58 |
| | மொத்தம் | 6359 | 8473 | 2845 |

| | |
|---|---|
| தொழிலில் ஈடுபடுத்துதல் - மாவட்ட தொழில் மத்திய நிலையத்தின் ஊடாக | 6359 |
| தொழிலில் ஈடுபடுத்துதல் - பிரதேச செயலகத்தின் ஊடாக | 8473 |
| சுய தொழிலாளர்களை உருவாக்குதல் | 2845 |
| தொழிலில் ஈடுபடுத்திய மொத்த எண்ணிக்கை | 17,677 |

## மாவட்ட தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் -2019

| | மாவட்டம் | இடம் | நடாத்தப்பட்ட திகதி | தொழில்எதிர்பார்த்திருப்போரின் எண்ணிக்கை | பங்குபற்றிய நிறுவனங்களின் எண்ணிக்கை | பயிற்சி நிறுவனங்களின் எண்ணிக்கை | தொழிலில் ஈடுபடுத்துதல் | தொழில்களை பொருத்துதல் | பயிற்சிகளுக்கு ஈடுபடுத்துதல் | செலவு (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | கேகாலை | மாவட்டச் செயலகம் - கேகாலை | 2019/03/09 | 2234 | 65 | 7 | 285 | 1267 | 85 | 131,584 |
| 02 | கண்டி | மாவட்டச் செயலகம் - கண்டி | 2019/03/31 | 2454 | 45 | 18 | 176 | 1391 | 511 | 161,024 |
| 03 | காலி | ஹோல் தி ஹோல் | 2019/06/22 | 825 | 41 | 9 | 83 | 1580 | 61 | 140,674 |
| 04 | மாத்தறை | மாவட்டச் செயலகம் - மாத்தறை | 2019/06/29 | 1748 | 37 | 6 | 257 | 1409 | 307 | 146,220 |
| 05 | குருணாகல் | மாவட்டச் செயலகம் - குருணாகல் | 2019/07/27 | 1206 | 25 | 6 | 154 | 679 | 169 | 156,585 |
| 06 | கிளிநொச்சி | மாவட்டச் செயலகம் - கிளிநொச்சி | 2019/09/03 | 1115 | 23 | 4 | 358 | 651 | 40 | 399,293 |
| 07 | பொலனறுவை | தோப்பாவெவ மகா வித்தியாலயம் - பொலனறுவை | 2019/09/21 | 1400 | 29 | 12 | 369 | 399 | 383 | 329,770 |
| 08 | மொனறாகல | சனசமூக நிலையம் - மொனறாகலை | 2019/09/27 | 953 | 17 | 17 | 37 | 279 | 152 | 371,613 |
| | மொத்தம் | | | 11935 | 282 | 79 | 1719 | 7655 | 1708 | 1,836,763 |

தொழில் தருனர்களுடன் நடாத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

| **திகதி** | **இடம்** | **பங்கேற்பு (நிறுவனங்களின் எண்ணிக்கை)** | **செலவுத் தலைப்பு** | **செலவு ரூ.** |
|---|---|---|---|---|
| 2019-02-07 | கேகாலை | 42 | 2-2509 | 40,000.00 |
| 2019-03-12 | கண்டி | 48 | 2-2509 | 40,000.00 |
| 2019-04-04 | காலி | 31 | 2-2509 | 40,000.00 |
| 2019-08-08 | வவுனியா | 38 | 2-2509 | 35,300.00 |

**இதன் ஊடாக தொழில் தருனர்கள்**

இதன் ஊடாக தொழில் தருனர்கள் மற்றும் மாவட்ட தொழில் மத்திய நிலையங்கள் மற்றும் தேசிய தொழில் மத்திய நிலையம் என்பவற்றிற்கிடையே அதாவது ஒட்டுமொத்தமாக திணைக்களமும், திணைக்களத்தின் சேவைகளை வழங்கக்கூடிய தொழில் தருனர்களுக்கிடையேயும் சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்திக் கொள்வதன் ஊடாக தொழில் சேவைகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் வழங்குதல் பரஸ்பர ரீதியாக நன்மைகளை பெற்றுக் கொள்ளுதல் என்பது இதன் முக்கிய நோக்கமாகும்.

## விசேட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

## லக் ரெகியா ஹரசர நிகழ்ச்சித்திட்டம்



இதன்போது தொழிலை எதிர்பார்த்திருக்கும் இளைஞர்களுக்கு தொழிலை வழங்குதல் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல் தொடர்பில் 9 மாவட்டங்களும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் தெரிவு செய்யப்பட்ட 9 மாவட்டங்களிலுள்ள தொழில் தருனர்கள், அதாவது, மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை, கண்டி, கேகாலை, கிளிநொச்சி, மொணறாகலை, பொலனறுவை, புத்தளம் மற்றும் கம்பஹா மாவட்டங்களில் பல்வேறு முயற்சியாளர்கள் பாராட்டுகளுக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

இங்கு உற்பத்தி, சேவைகள், விவசாயம் மற்றும் சுயதொழில் என்ற ரீதியில் தொழில் தருனர்கள் விசேட குறிகாட்டிகளின் ஊடாக பாராட்டப்பட்டு பொன், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்.

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் பிரதான செயற்பாட்டு அலகாக மாவட்ட தொழில் மத்தியநிலையம் காணப்படுகின்றது. அதனுடன் மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகங்கள் தொடர்ச்சியாக பரஸ்பரமாக இணைந்து தேசிய தொழில் சேவைக்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். நாட்டின் அனைத்து மாவட்ட செயலகங்களையும் மையமாகக் கொண்டு தற்போது மாவட்ட தொழில் நிலையம் பொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலையங்கள் 25இன் ஊடாக செயற்படுகின்றது. லக் ரெகியா ஹரசர நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அந்த மத்திய நிலையங்கள் மற்றும் பிரதேச செயலகங்களின் செயலாற்றுகை அதாவது தொழில் எதிர்பார்த்திருப்போரை தொழிலில் ஈடுபடுத்துதலை முன்னுரிமையாகக் கொண்டு வருடாந்த செயலாற்றுகையின் இலக்குகளை அடைந்து கொள்கைகளை அடைந்து கொள்ளுதல் தொடர்பில் கவனத்திற் கொண்டு தரப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டு மாவட்ட தொழில் மத்திய நிலையங்கள் 25இனையும் மதிப்பீட்டிற்குஉட்படுத்தி பொன், வெள்ளி, வெண்கல விருதுகள் வழங்கப்பட்டன. இதன்போது தங்க விருது யாழ்ப்பாண குழுவிற்கும், வெள்ளி விருதை குருணாகல் குழுவும், வெண்கல விருதை மட்டக்களப்பு மாவட்டமும் பெற்றுக் கொண்டது.

**கொரிய இராஜதந்திர தலையீட்டின் அடிப்படையில் தொழில்வாய்ப்பு மற்றும் ஊழிய நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான கொள்கை ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்கள்.**

இச்செயற்பாடானது கொள்கை ஆலோசனை செயற்பாடாகும். (Policy consultation Programe) அது கொரிய தொழில் அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு நிறுவனமான

KEIS–Korean Employment Information Service நிறுவனத்தின் ஊடாக நடாத்தப்பட்டது. 2019ஆம் ஆண்டுக்கான சுற்றுலாவின் போது திணைக்களத்திற்குத் தேவையான Employment sourcing and delivery முறைக்கான முன் சாத்தியவள ஆய்வின் பெறுபேறுகள் அவர்களால் முன்வைக்கப்பட்டன. அதனடிப்படையில் அக்கருத்திட்டமானது மத்தியதர ஆபத்தைக் கொண்ட கருத்திட்டமாக அடையாளங்காணப்பட்டது. அதனடிப்படையில் அப்பிரதிநிதித்துவக் குழுவினால் தமது அமைச்சிற்கு விடயங்கள் முன்வைக்கப்பட்டு 2020 மற்றும் அதற்குப் பின்னர் பிரேரிக்கப்பட்ட சாத்தியவள ஆய்விற்கு அனுமதி பெற்றுக் கொள்ளப்படவேண்டியுள்ளது. அவ்வாறு அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் மொத்த கருத்திட்டத்திற்கு தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு கருத்திட்ட பிரேரணைகளை முன்வைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தேசிய மனிதவள மற்றும் சேவை வாய்ப்பு கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல்.**

இந்த அலகின் கீழ் அமைச்சுக்களிலிருந்து முன்னேற்றத்தை பெற்றுக் கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட கணனி மென்பொருள் ICT based progress Monitoring System மீளவும் தாபிக்கப்பட்டது. 2019.01.01 ஆந் திகதிய கொள்கைளை நடைமுறைப்படுத்துவதற்கு நேரடியாக தொடர்புபட்டதாக அறிந்து கொள்ளப்பட்ட 25 அமைச்சுக்களுள் கொள்கைகளை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துதல் தொடர்பில் இந்த செயற்பாட்டை, தேசிய கொள்கைகள், பொருளாதார செயற்பாடுகள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு ஆகிய அமைச்சுக்கள் மற்றும் அப்போதைய தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் சம தலைமைத்துவத்தில் மேற்கொள்ளப்பட்டது. அதன்போது தெரிவுசெய்யப்பட்ட 5 கொள்கைகள் அல்லது 6 கொள்கைகளுக்கு கொள்கை மட்டத்திலான செயற்பாடுகளை அறிந்து கொள்வதற்கு கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குரித்தாக அமைச்சினால் கொள்கை வகுப்பு பிரதிநிதி - Focal point ,அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் - Authorization officer தரவு உள்ளீட்டு உத்தியோகத்தர் - Data Entry officer ஆகிய 3 மட்டங்கள் தெரிவுசெய்யப்பட்டது. இதன்போது அமைச்சுக்களை ஒருங்கிணைக்கும் செயற்பாடானது தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள் அமைச்சு, மீள்குடியேற்றல் மற்றும் புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு ஆகிய அமைச்சுக்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

அவ்வாறே, இந்த அலகின் ஊடாக விவசாயம், சுகாதாரம் மற்றும் கணக்காய்வு ஊழியர்கள் தொடர்பில் துறைசார் ஆய்வை மேற்கொள்வதற்கு தேவையான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளபபட்டது. இதற்காக அண்ணளவான குறிகாட்டிகள் -TOR முன்னதாகவே தயாரிக்கப்பட்டது. அதன்பின்னர் பெறுகை செயற்பாடுகளை பின்பற்றப்பட்டு தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் ஊடாக இறுதி அளவுகோல்கள் தயாரிக்கப்பட்டன. பத்திரிகை விளம்பரங்கள் ஊடாக ஆய்வுகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான தரப்பினரது விருப்புகள் கோரப்பட்டன. அதனடிப்படையில் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் விதப்புரைகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் விதந்துரைக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் முன்வைத்த விலைமனுக்கோரல்களை கவனத்திற் கொண்ட போது ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் போதுமானதாக இல்லாமையால் 2020 ஆம் ஆண்டில் பெறுகை செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பெறுகை குழுவின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

**சமுதாய செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தும் மலர் வளர்ப்பு, மாலைகளைத் தயாரித்தல் மற்றும் விற்பனை கருத்திட்டம் - கதிர்காமம்**

**கதிர்காமம் புண்ணிய பூமியை அண்டியதாக கதிர்காமம் கிரிவெஹெர, கதிர்காமம் கோயில், செல்லக்கதிர்காமம் பிள்ளையார் ஆலயம் மற்றும் ஏழுமலை ஆகிய மதத்தலங்கள் பல காணப்படுகின்றன. இங்கு வருகை தரும் யாத்திரிகர்களுக்குத் தேவையான பூக்களை வழங்குதல் இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும்.**

கதிர்காமத்திற்கு வருகின்ற யாத்திரிகர்கள் கதிர்காமம் கோயிலுக்கும் ஏனைய தேவாலயங்களுக்கும் பூஜைத்தட்டுகளை வழங்குகிறார்கள். இந்த பூஜை தட்டுக்கு ''மலர் மாலை'' வைத்தல் வழக்கமாகும். இந்த மாலை பொலிதீனால் தயாரிக்கப்பட்டிருக்கும். இதனால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுகின்றது. எனவே இதற்குப் பதிலாக இயற்கை மலர்களை பயன்படுத்துதல் பொருத்தமானதாக அமைவதே இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதன்போது மலர்மாலைகளை வழங்குதல், இயற்கையான மலர் மாலைகளை வழங்குதல், நாற்று மேடைகளை பராமரித்தல் மற்றும் விற்பனை என்பன இக்கருத்திட்டத்தில் இடம்பெறுகின்றது.

இங்கு மலர் வளர்ப்போர், மலர் விற்பனை செய்வோர், இடைத்தரகர்கள் மற்றும் மூலப் பொருட்களை வழங்குவோருக்கு தொழில்வாய்ப்புக்கள் கிடைக்கின்றன.

## 2.2 சவால்கள் மற்றும் எதிர்கால இலக்கு

திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட குறைந்தளவு ஏற்பாடுகளின் ஊடாக சிறந்த சேவையை மக்களுக்கு வழங்குதல் போன்ற பிரச்சினை போன்றே அரசாங்கத்தின் சட்டதிட்டங்கள் விதிமுறைகளுக்கமைய இந்த வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் சிறந்த மனிதாபிமான சேவையை இத்திணைக்களம் வழங்குவதில் சவால்களை எதிர்நோக்குகின்றது.

- தொழிநுட்ப கருவிகளை பயன்படுத்தும் போது காணப்படும் நெகிழ்ச்சியற்ற தன்மை மற்றும் அத்தகைய நெகிழ்வான கருவிகள் திணைக்களத்திடம் காணப்படாமை.
- திணைக்களத்தின் அதிகளவான உத்தியோகத்தர்கள் பட்டதாரிகள் என்பதுடன் அவர்கள் கம்பஹா, கொழும்பு, மாத்தறை, காலி, குருணாகல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் கஸ்டப் பிரதேசங்களுக்கு உத்தியோகத்தர்களை பணிக்கமர்த்தல் மிகவும் கடினமாக உள்ளது.
- திணைக்களத்தின் முக்கிய பணியான தொழில் வழிகாட்டல், தொழில் உருவாக்கல் மற்றும் மேம்படுத்தல், தொழில் சேவைகளை ஒருங்கிணைத்தல், மனிதவலு திட்டமிடல், தொழிலின்மையைக் குறைத்தலுக்கான ஆராய்ச்சிய நடவடிக்கைகளை ஒழுங்கு செய்து நடாத்துதல், தொழில் பொருத்தப்பாடு அபிவிருத்திக்கான பயிற்சிகளை நடாத்துதல் மற்றும் தொழில் மற்றும் வருமான உருவாக்கல் விசேட கருத்திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல் ஆகிய செயற்பாடுகளை அச்சேவைகள் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்ற பிரதேசங்களுக்கு வழங்க முற்படுகையில் அதற்கான உத்தியோகத்தர்கள் குறைவாகக் காணப்படுதல் மற்றுமொரு சவாலாகும்.
- சமூக ரீதியான மனப்பாங்கு மற்றும் சமூகக் கட்டமைப்பில் காணப்படுகின்ற பிரச்சினைகளை காரணமாக தொழில் வழிகாட்டலை வழங்கினாலும் மனப்பாங்கு ரீதியான மாற்றமொன்றை மக்களிடையே ஏற்படுத்துதல் கடினமாகும்.

# அத்தியாயம் 03

# ஆண்டின் மொத்த நிதி செயலாற்றுகை

3 ஆம் அத்தியாயம் -2019 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த நிதி செயலாற்றுகை

## 3.1 நிதி செயலாற்றுகை கூற்று

ஏசீஏ – எப்

### 2019.12.31 ஆந் திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதி செயலாற்றுகை கூற்று

ரூ.

| வரவுசெலவுத்திட்டம் | | குறிப்பு | உண்மை நிலை | |
|---|---|---|---|---|
| 2019 | | | 2019 | 2018 |
| | **வருமானம் பெறுவனவு** | | | |
| | வருமான வரி | 1 | | |
| | உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | | |
| | சர்வதேச சந்தை மீதான வரி | 3 | | |
| | வரியல்லா வருமானம் மற்றும் பிற | 4 | | |
| | **மொத்த வருமானம் பெறுவனவு (அ)** | | | |
| | வருமானமல்லாத பெறுவனவு | | | |
| | திறைசேரி கட்டுநிதி | | 358,050,000 | 345,036,726 |
| | வைப்பு | | 798,025 | 207,404 |
| | முற்பனக்கனக்கு | | 15,848,315 | 13,908,338 |
| | பிற பெறுவனவுகள் | | 16,195,573 | 14,487,377 |
| | **மொத்த வருமானமல்லாத பெறுவனவுகள் (ஆ)** | | 390,891,913 | 373,639,845 |
| | **மொத்த வருமானங்களின் பெறுவனவுகள் மற்றும் வருமானமல்லாத பெறுவனவுகள் இ=(அ) + ( ஆ)** | | 390,891,913 | 373,639,845 |
| | கழித்தல் - செலவுகள் | | | |
| | **மீண்டெழும் செலவுகள்** | | | |
| 311,000,000 | சம்பளம், சம்பளம் மற்றும் ஏனைய ஊழியர் நன்மைகள் | 5 | 300,751,505 | 279,033,954 |
| 67,100,000 | ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் | 6 | 65,313,123 | 45,637,119 |
| 8,700,000 | மானியங்கள் கொடை மற்றும் மாற்றல்கள் | 7 | 8,171961 | 7,995,916 |
| | வட்டி கொடுப்பனவு | 8 | | |
| 200,000 | பிற மீண்டெழும் செலவுகள் | 9 | 161,548 | 196,985 |
| 387,000,000 | **மொத்த மீண்டெழும் செலவுகள் (ஈ)** | | 374,398,137 | 332,863,974 |
| | **மூலதனச் செலவுகள்** | | | |
| | **மூலதன சொத்துக்கள்** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 3,000,000 | புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி | 10 | 1,543,980 | 1,062,062 |
| 1,500,000 | மூலதன சொத்துக்களை கையகப்படுத்தல் | 11 | 796,130 | 849,976 |
| | மூலதன மாற்றம் | 12 | | |
| | நிதி சொத்துக்களை கையகப்படுத்தல் | 13 | | |
| 4,500,000 | திறன் விருத்தி | 14 | 2,466,304 | 3,802,829 |
| 26,000,000 | பிற மூலதனச் செலவுகள் | 15 | 20,627,469 | 16,988,758 |
| 35,000,000 | **மொத்த மூலதனச் செலவுகள் (உ)** | | 25,433,883 | 22,703,625 |
| | பிரதான லெஜர் செலவு (ஈ) | | 15,586,182 | 18,072,049 |
| | வைப்பு கொடுப்பளவு | | 762,030 | 384,251 |
| | வருமானக் கொடுப்பளவு | | 311,641 | |
| | முற்பணக் கொடுப்பளவு | | 14,512,511 | 17,687,798 |
| | **மொத்த செலவு எ (இ+ உ + C)** | | 415,418,202 | 373,639,648 |
| | **2019 டிசம்பர் 31 ஆந் திகதியில் கட்டுநிதி மீதி ஏ = இ - எ)** | | (24,526,286) | 197 |

## 3.2 நிதி நிலைமைகள் தொடர்பான கூற்று

ஏசீஏ - பீ

**2019 டிசம்பர் 31 ஆந் திகதியில்**

**நிதி நிலைமைகள் தொடர்பான அறிக்கை**

| | குறிப்பு | உண்மை | |
|---|---|---|---|
| | | 2019 ரூ.. | 2018 ரூ. |
| நிதியல்லா சொத்துக்கள் | | | |
| சொத்துக்கள் பொறிமுறைகள் மற்றும் உபகரனங்கள் | ஏசீஏ -6 | 76,520,773 | 70,978,466 |
| நிதிச் சொத்துக்கள் | | | |
| முற்பனக் கனக்கு | ஏசீஏ – 5 | 39,379,976 | 40,422,056 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை | ஏசீஏ - 3 | | |
| **மொத்த சொத்துக்கள்** | | 115,900,749 | 111,400,522 |
| தேறிய சொத்துக்கள் / நிறை | | | |
| தேறிய சொத்துக்கள் | | 39,010,682 | 40,346,642 |
| சொத்துக்கள் பொறிமுறைகள் மற்றும் உபகரன குழுமம் | | 76,520,773 | 70,978,466 |
| வாடகை மற்றும் வேலை முற்பனக் குழுமம் | ஏசீஏ -5(ஆ) | | |
| நடைமுறை பொறுப்புக்கள் | | | |
| வைப்புக் கனக்குகள் | ஏசீஏ -4 | 111,212 | 75,217 |
| கட்டுநிதி மீதி | ஏசீஏ -3 | 258,082 | 197 |
| **மொத்த சொத்துக்கள்** | | 115,900,749 | 111,400,522 |

பக்க இலக்கம் 01 முதல் 28 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 29 முதல் 36 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| ..................... | ..................... | ..................... |
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர் (நிதி)/ஆணையாளர்(நிதி) |
| பெயர்: | பெயர்: | பெயர் : |
| பதவி : | பதவி : | |
| திகதி : | திகதி : 2020.02.14 | திகதி : 2020/2/14 |

டீ. எம். சரத் அபயகுணவர்தன
செயலாளர்
திறன்கள் அபிவிருத்தி,
வேலைவாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு

Lal Samarasekara
Director General
Department of Manpower & Employment
9th Floor, Sethsiripaya - Stage II
Battaramulla.

## 3.3 நிதிப்பாய்ச்சல் தொடர்பான கூற்று

**2019** டிசம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதி பாய்ச்சல் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | 2019 | 2018 |
| | ரூ. | ரூ. |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | _ |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | 1,419,674 |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | 15,883,932 | - |
| பிற திணைக்களங்கள் .'. அமைச்சுக்களின் ஊடாக சேகரிக்கப்படுகின்ற வருமானம். | - | - |
| கட்டுநிதி பெறுவனவுகள் | 358,050,000 | 344,200,000 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **373,933,932** | **345,619,674** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | 366,226,176 | 311,800,355 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 8,171,961 | 7,995,916 |
| பிற செலவுத் தலைப்புக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் | 3,317,353 | - |
| திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட கட்டுநிதி | 1,102 | 197 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **377,716,592** | **319,796,468** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)ஞீ(அ)-(ஆ)** | **(3,782,660)** | **25,823,206** |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| பௌதீக சொத்துக்களின் சொத்துக்களின் விற்பனை | - | - |
| வழங்கப்பட்ட கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |

| | | |
|---|---|---|
| முற்பணங்களை அறவிடுதல் | 15,848,315 | 13,908,338 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | **15,848,315** | **13,908,338** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| பௌதீக சொத்து நிருமாணம் அல்லது கொள்வனவு மற்றும் வேறு முதலீகளைக் கொள்வனவு செய்தல். | 25,433,883 | 22,703,625 |
| முற்பணக் கொடுப்பனவுகள் | 14,512,511 | 17,687,799 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **39,946,394** | **40,391,424** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)ஸ்ரீ(இ-ஊ)** | **(24,098,079)** | **(26,483,086)** |
| **தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டு செயற்பாடுகளினால் உருவான தேறிய நிதி பாய்ச்சல் (எ)ஸ்ரீ( இ) ‚ (ஊ)** | **(27,880,739)** | **(659,880)** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | 836,726 |
| வைப்பு பெறுவனவுகள் | 798,025 | 207,404 |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | **798,025** | **1,044,130** |
| **கழி: காசு செலவீனம்** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| வைபபு கொடுப்பனவு | 762,030 | 384,251 |
| நிதி செயற்பாடுகளிலிருந்து செலவிடப்பட்ட மொத்த நிதிப்பாய்ச்சல் (ஐ) | **762,030** | **384,251** |
| நிதி செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட நிதிப்பாய்ச்சல் (ஒ) ஸ்ரீ (ஏ) – (ஐ) | **35,995** | **659,879** |
| **காசுகளின் தேறிய மாற்றங்கள் (ஔ) ஸ்ரீ (எ) ‚ (ஓ)** | **(27,844,744)** | - |
| ஜனவரி 01 தொடக்கம் ஆரம்ப காசு மீதி | **-** | **-** |
| டிசம்பர் 31ஆந் திகதியில் இறுதி காசு மீதி | **258,082** | - |

3.4 நிதிக் கூற்றுக்களின் குறிப்பு

**3.5 வருமானம் சேகரிப்பின் செயலாற்றுகை**

| வருமான குறியீடு | வருமானக் குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | அளவு | இறுதி வருமான மதிப்பீட்டின் % ஆக |
| உரியதன்று | | | | | |

**3.6 ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்துவதன் செயலாற்றுகை**

ரூ.000

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கப்பட்ட ஏற்பாடு | | உண்மை செலவு | பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் முடிக்கப்பட்ட இறுதி ஏற்பாட்டின் % மாக |
|---|---|---|---|---|
| | நிதி ஏற்பாடுகள் | இறுதி ஏற்பாடுகள் | | |
| மீண்டெழும் | 387,000 | 387,000 | 374,398 | 96 |
| மூலதனம் | 35,000 | 27,775 | 25,433 | 92 |

**3.7 நி.பி.208இன் பிரகாரம் பிற அமைச்சுக்கள் / திணைக்களங்களது பிரதிநிதிகளாக இத்திணைக்களத்திற்கு / மாவட்ட செயலகத்திற்கு / மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகள்**

ரூ,000

| தொடரிலக்கம் | ஏற்பாடுகளைப் பெற்ற அமைச்சுக்கள் | ஏற்பாடுகளின் நோக்கம் | ஏற்பாடுகள் | | தேறிய செலவுகள் | பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் முடிக்கப்பட்ட இறுதி ஏற்பாட்டின் % மாக |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப ஏற்பாடு | இறுதி ஏற்பாடு | | |
| 01 | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு | சுனிசி திட்டத்திற்கான செலவினம் | 3,730 | 4,371 | 3,224 | 74 |

**3.8 நிதியல்லாச் சொத்துக்களை அறிக்கையிடலின் செயலாற்றுகை**

ரூ.,000

| சொத்து குறியீடு | குறியீட்டு விபரம் | 31.12.2019 ஆந் தகிதியில் பொருட் சுற்றாய்வு அறிக்கையின் அடிப்படையில் மீதி | 31.12.2019 திகதியில் நிதி நிலைமை அறிக்கையின் அடிப்படையில் மீதி | எதிர்வரும் காலங்களில் கணக்கீட்டிற்குட்பட்ட | முன்னேற்றத்தை % ஆக அறிக்கையிடல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடமும் கட்டமைப்புக்களும் | | | | |
| 9152 | இயந்திரங்கள் | 76,520 | 76,520 | | 100 |
| 9153 | காணி | 603254910 | | | |
| 9154 | கட்புலனாகா சொத்துக்கள் | | | | |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | | | | |
| 9160 | நடைபெறும் வேலைகள் | | | | |
| 9180 | குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் | | | | |

## 3.9 கணக்காய்வாளரின் அறிக்கை

2019 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை இணைப்பில் காட்டப்பட்டுள்ளது. .

# அத்தியாயம் 04

# செயலாற்றுகை குறிகாட்டிகள்

## 04 ஆம் அத்தியாயம் செயலாற்றுகை குறிகாட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகை குறிகாட்டிகள் (செயலாற்றுகைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது)

| **விசேட குறிகாட்டிகள்** | **எதிர்பாரா முடிவுகளது சதவீதமாக (%) உண்மை முடிவுகள்** | | |
|---|---|---|---|
| | 100% -90% | 75% - 89% | 50% - 74% |
| தொழில் எதிர்பார்த்திருப்போரை பதிவு செய்தல் | 90.55% | | |
| பதவி வெற்றிடங்களை பதிவு செய்தல் | 97.69% | | |
| தொழிலில் ஈடுபடுத்துதல் | | | 53.77% |
| பாடசாலை மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 103.72% | | |
| சுய தொழிலில் ஈடுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 130.86% | | |
| சுய தொழில் மற்றும் முயற்சிகளை ஆரம்பித்தல். | | 87.26% | |

# அத்தியாயம் 05

# நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்து கொள்வதன் செயல்திறன்

5.1 அத்தியாயம் 05 - நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதற்கான செயல்திறன்

5.2 **5.1** அடையாளம் காணப்பட்ட நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடையாளம் காணல்.

| இலக்குகள் / குறிக்கோள்கள் | இலக்குகள் | வெற்றி குறிகாட்டிகள் | இதுவரை வெற்றி பெற்ற விடயங்களின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0% - 49% | 50% - 74% | 75% - 100% |
| நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் 4 - ஒரு முழுமையான, நியாயமான தரமான கல்வியை உறுதி செய்தல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்றல் வாய்ப்புகளை வழங்குதல் | இலக்கு 4.3. 2030 க்குள், அனைத்து பெண்களுக்கும் ஆண்களுக்கும் தரமான உயர் கல்வி பல்கலைக்கழக கல்வி உட்பட தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் மூன்றாம் நிலை கல்வியைத் தொடர வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்தல் . | 2019 ஆம் ஆண்டில் க.பொ.த. சாதாரன தர பரீட்சைக்கு தோற்றும் 20% மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டுதல் வழங்குதல் | | | 94.89% |
| | | 2019 ஆம் ஆண்டில் க.பொ.த. உயர்தர பரீட்ச்சைக்கு தோற்றும் 20% மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டுதலை வழங்குதல் | | | 91.99% |
| | | 2019 ஆம் ஆண்டு தொடக்கம் ஆண்டுதோறும் 311 பெற்றோர் விழிப்புணர்வு திட்டங்களை தீவு முழுவதும் நடத்துதுதல் | | | 139% |
| | இலக்கு 4.4. 2030 ஆம் ஆண்டளவில் சுனிசி தொழில்வாய்ப்பு மற்றும் | 2019 இல் 311 சுய வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு திட்டங்களை நடத்துதல் . | | | 130.86% |
| | | 2019 ஆம் ஆண்டில் தீவு முழுவதும் 20 தொழில் முனைவோர் மேம்பாட்டு | | | 130% |

| இலக்குகள் / குறிக்கோள்கள் | இலக்குகள் | வெற்றி குறிகாட்டிகள் | இதுவரை வெற்றி பெற்ற விடயங்களின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0% - 49% | 50% - 74% | 75% - 100% |
| | முயற்சியாண்மைக்கு தொழிநுட்ப மற்றும் தொழில்சார் தகைமைகள் உள்ளிட்ட உரிய திறன்களைப் பெற்று இளைஞர்கள் மற்றும் வளர்ந்தோருக்கு எண்ணிக்கையை ஒரு மட்டத்திற்கு அதிகரித்தல். | திட்டங்களை நடத்துதல் | | | |
| | | தொழில்முனைவோர் தேவைகள் கருதி 2019 ஆம் ஆண்டு முழுவதும் தீவு முழுவதும் 200 பயிற்சித் திட்டங்களை நடத்துதல். | | | 86% |
| நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 8 – அனைவருக்கும் ஊட்டமான, முழுமையான மற்றும் நிலைபேறான பொருளாதார அபிவிருத்தி, முழுமையான விளைத்திறனான விளைதிறனான தொழில் மேம்பாடு | இலக்கு 8.5 2030ஆம் ஆண்டளவில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் இளைஞர்கள் உள்ளிட்ட அனைத்து பாலினருக்கும் சிறந்த தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொடுத்தல். | 2019 ஆம் ஆண்டில் 100,000 தொழில விண்ணப்பதாரர்களை பதிவு செய்தல் | | | 90.55% |
| | | 2019 இல் தொழில் வெற்றிடங்கள் 39,600ஐ பதிவு செய்தல் | | | 97.69% |
| | | 2019 ஆம் ஆண்டில் தொழில் எதிர்பார்த்திருப்போர் 27,580 ஐ தொழிலில் ஈடுபடுத்துதல் | | 53.77% | |
| | | 2019 ஆம் ஆண்டில் முயற்சியாண்மையாளர்கள் மற்றும் சுயதொழில் முயற்சியாளர்கள் 3260 உருவாக்குதல் | | | 87.26% |
| | | 2019 ஆம் ஆண்டில் தொழில் எதிர்பார்த்திருப்போர் 40,300 களுக்கு தொழில் வழிகாட்டலை | | | 101.59% |

| இலக்குகள் / குறிக்கோள்கள் | இலக்குகள் | வெற்றி குறிகாட்டிகள் | இதுவரை வெற்றி பெற்ற விடயங்களின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0% - 49% | 50% - 74% | 75% - 100% |
| | | மேற்கொள்ளுதல். | | | |
| | | 2019 ஆம் ஆண்டில் தொழில் எதிர்பார்த்திருப்போர் 16,390 ஐ பயிற்சிகளுக்கு ஈடுபடுத்துதல் | | | 91.79% |

## 5.2 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் எதிர்கொள்ளும் சவால்களின் சுருக்கம்

**சவால்கள்**

1. ஒரே நோக்கத்திற்காக ஒரே பயனாளிகளின் குழுவிற்கு வெவ்வேறு திணைக்கள அதிகாரிகளால் சேவைகளை வழங்கும் போது தங்களது கடமைகளையும் பொறுப்புகளையும் விளங்கிக்கொள்வதில் சிக்கல்கள் ஏற்படுகின்றது (அதிகாரிகளுக்கு இடையிலான கடமை புரிதல்களின் ஏற்றத்தாழ்வு)

2. தொழில் வழிகாட்டல், மற்றும் தொழில் வாய்ப்புகளை உருவாக்குகின்றபோது சமர்பிக்கப்படுகின்ற வருடாந்த இடைக்கால கால வரவு செலவுத் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட வருடாந்த நிதி ஒதுக்கீட்டின் காரணமாக விரிவான சேவையை வழங்குவதிலும் சேவையின் தரத்தை பராமரிப்பதிலும் சிரமம் எதிர்கொள்ளப்படுகின்றது.

3. திணைக்களத்தின் அனைத்து அதிகாரிகளுக்கும் தகவல் தொழில்நுட்ப வசதிகள் மற்றும் முன்னேற்ற மதிப்பீட்டு முகாமைத்துவ தகவல் அமைப்பு இல்லாமை பெரும் குறைபாடு ஆகும் மற்றும் இந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கத்திற்காக தயாரிக்கப்பட்ட திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு மிகவும் குறைவாகவே உள்ளது. இதன் காரணமாக தீவின் அனைத்து அதிகாரிகளையும் ஒரு பொதுவான பொது கட்டமைப்புக்குள் கொண்டு வருவது கடினம்.

4. அதிகாரிகளின் அறிவு, அணுகுமுறைகள் மற்றும் திறன்களை தொடர்ந்து அபிவிருத்தி செய்வதற்கான போதிய கொள்கை ஏற்பாடுகள் இல்லை.

# அத்தியாயம் 06

# மனித வள விபரத்திரட்டு

## மனிதவள விபரத்திரட்டு

## 6.1 ஊழியர்கள் எண்ணிக்கை முகாமைத்துவம் - 31.12.2019ஆந் திகதியில்

| | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | தற்போதைய ஊழியர்களின் எண்ணிக்கை | வெற்றிடங்கள் / (மேலதிக ) ** |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 15 | 6 | 9 |
| மூன்றாம் நிலை | 4 | 0 | 4 |
| இரண்டாம் நிலை | 673 | 569 | 104 |
| ஆரம்ப நிலை | 15 | 13 | 02 |

## 6.2 நிறுவனத்தின் செயல்திறனில் மனித வள பற்றாக்குறையின் தாக்கம்

மேலே உள்ள அட்டவணையின்படி, 15 நிர்வாக நிலை பதவிகளில் 9 வெற்றிடங்கள் உள்ளன, இவற்றில் 07 வெற்றிடங்கள் இலங்கை நிர்வாக சேவையில் உள்ளவர்களுக்கான பதவிகளாகும் . இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2016 ஆம் ஆண்டு முதல் கோரிக்கைகள் செய்யப்பட்டு, பொது நிர்வாக செயலாளருடன் பல கலந்துரையாடல்களில் ஈடுபட்டு இந்தத் துறையில் அதிகாரிகள் நியமனங்கள் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது, ஆனால் இதுவரை வெற்றிகரமான முடிவுகள் எதுவும் பெறப்படவில்லை.

திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவி 28.11.2019 முதல் வெற்றிடமாக இருந்து வந்துள்ளது தற்போது திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சகத்துடன் இணைக்கப்பட்டு இலங்கை நிர்வாக சேவையின் சிறப்பு தர அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையில் தற்போது வெற்றிடமாக உள்ள இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் தர பதவிகளில், ஒரு இயக்குநர் பதவி உட்பட மனிதவள மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி பிரிவுக்கும், மேலும் இரண்டு நிர்வாக பதவிகள் வெற்றிடமாக உள்ளன. இவற்றில், இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்ட விடயங்களின் மூன்று முக்கிய நோக்கங்களை அடைவதற்காக மனித வலு திட்டமிடல் மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி பிரிவு நிறுவப்பட்டுள்ளது. அதன்படி, ஒரு தேசிய மனித வலு மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையை உருவாக்குதல் தொழிலாளர் சந்தை தகவல்களை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் போன்ற விடயங்களையும் வேலைத் துறையால் வழங்கப்படும் சேவைகளையும் இந்த பிரிவு வழிநடத்துகிறது. அதன்படி, இந்த பிரிவுக்கு 03 உதவி இயக்குநர் பதவிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன, ஆனால் தற்போது ஒரு உதவி இயக்குநர் மட்டுமே பணியாற்றி வருகிறார். பிரிவினால் செய்ய வேண்டிய அனைத்து வேலைகளையும் அந்த அதிகாரி செய்ய வேண்டும்.

நிருவாகப் பிரிவிற்கு மட்டும் தொழில் திணைக்களத்தில் சேவையாற்றும் இ.நி.சே.தரம் 1இன் உத்தியோகத்தரொருவர் பதிற்கடமைக்காக நியமிக்கப்பட்டிருந்தாலும், உதவி பணிப்பாளரொருவர் இன்றி அதன் கடமைகளை மேற்கொள்ளுதல் சிரமமாக உள்ளது.

பதிற்கடமை புரிகின்ற உத்தியோகத்தர்கள் காரணமாக உரிய விதத்தில் எல்லா கடமைகளையும் நிறைவேற்றிக் கொள்ளுதல் கடினமென்பதுடன் திணைக்களத்தின் நோக்கங்களைத் திட்டமிடுதல் கடினமாக உள்ளது. அத்தோடு நிரந்தர உத்தியோகத்தர்களின் குறை காரணமாக அன்றாட செயற்பாடுகள் மட்டுமே மேற்கொள்ள முடிவதுடன் திணைக்களத்தின் உண்மையான நோக்கம் அடைந்து கொள்ளப்பட முடியாதுள்ளது.

தற்போது இ.நி.சே.காணப்படும் வெற்றிடங்களுக்கு கடமை மேற்கொள்வதற்குக் கூட உத்தியோகத்தர்களை நியமிக்க முடியாதுள்ளதுடன் திணைக்களத்திலுள்ள இ.நி.சே. உதவி பணிப்பாளர்கள் இருவரும் மேலும் இரண்டு பிரிவுகளில் கடமைகளை மேற்கொள்கின்றனர்.

எங்களது திணைக்களம் A தரத்திலான திணைக்களமாகும். எங்களது திணைக்களத்துக்கு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்று கட்டாயம் இருக்க வேண்டும். ஆனால் உள்ளக கணக்காய்வு அதிகாரி ஒருவர் இதுவரையும் நியமிக்கப்படவில்லை. எமது திணைக்களத்தில் உள்ளக கணக்காய்வு பகுதியானது செயற்படாத ஒரு பகுதியாகவே இருந்து வருகின்றது. அதனால் எங்களது நிர்ணயித்த இலக்குகளை அடைய முடியாமல் உள்ளது. அதன் காரணமாக இலங்கை கணக்காளர் சேவையில் உள்ள தரம் II அல்லது III தரத்திலான அதிகாரி ஒருவரை நியமித்தல் அவசியம் இந்த பதவி குறைபாடு காரணமாக கணக்காளர் பிரிவு மற்றும் கணக்காய்வு பகுதி என்பன எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெறமுடியாமல் உள்ளது.

தொழில் நிலை சேவை பதவிகள் என்பதால் திணைக்களத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட நிர்வாக அலுவலர், மொழிபெயர்ப்பாளர், தகவல் தொழில்நுட்ப அதிகாரி மற்றும் புள்ளிவிவர அலுவலர் போன்ற அனைத்து பதவிகளும் தற்போது வெற்றிடமாக உள்ளன.

முகாமைத்துவ உதவியாளர்கள் சேவையில் மூன்று வெற்றிடங்களை, அபிவிருத்தி அலுவலர் சேவையில் இரண்டு வெற்றிடங்களும் உள்ளன. 31.12.2019 தேதியின்படி சிரேஷ்ட தரத்தில் 02 வெற்றிடங்களும் திணைக்களத்தில் உள்ளன.

பணியாளர் தர வெற்றிடங்களை நிரப்பாதது திணைக்களத்தின் முன்னேற்றத்திற்கு பெரும் தடையாக மாறியுள்ளது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

## 6.3 மனிதவள அபிவிருத்தி

| நிகழ்ச்சி நிரலின் பெயர் | பயிற்சி பெற்ற ஊழியர் களின் எண்ணிக்கை | நிகழ்ச்சி நிரல் கால எல்லை | மொத்த முதலீடு(&.'000) | | நிகழ்ச்சி நிரலின் தன்மை (உள்நாட்டு / வெளிநாட்டு) | விருத்தி செய்யப்பட்ட / பெற்ற அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| தாபனக் விதிகள் மற்றும் நடைமுறை விதிகளின் பயன்பாடு | 02 | 2019.01.24 ரூ 25 | 17 | - | உள்நாடு | ஸ்தாபனக் கோவை , சுற்றறிக்கைகள், மற்றும் விடுமுறை தொடர்பான ஏற்பாடுகள் குறித்த விழிப்புணர்வு |
| தனிப்பட்ட கோப்பு ஒன்றை பராமரித்தல் | 03 | 2019.01.28 ரூ 29 | 25.5 | - | உள்நாடு | தனியாள் கோவையை பராமரித்தல் மற்றும் அதில் உள்ளடக்கப்பட வேண்டிய கடிதங்கள் |
| சனாதிபதிக்கு சொல்லுங்கள் திட்டத்திற்குரிய தரவுத் தளத்தை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான பயிற்சி செயலமர்வு | 35 | 2019.02.11 | 35 | - | உள்நாடு | தரவு கட்டமைப்பை செயற்படுத்துதல் |
| Career Key | 23 | 2019.03.09 | 15.85 | - | உள்நாடு | செயற்படுத்தும் விதம் |
| அரச அதிகாரிகளுக்கான விடுமுறை ஏற்பாடுகள் குறித்த இரண்டு நாள் பயிற்சி பட்டறை | 01 | 2019.03.11 ரூ2019.03.12 | 8.5 | - | உள்நாடு | தாபன விதிமுறைகள் மற்றும் நி.பி.அடிப்படையில் |
| முன்னேற்ற மதிப்பீட்டு அலகை பயன்படுத்தி படிவ மதிப்பாய்வு திட்டம் மேற்கொள்ளல் | 35 | 2019.03.11 | 13.65 | - | உள்நாடு | படிவங்கள் மற்றும் அவற்றின் பயன்பாடு பற்றி விளக்கம் |
| Advance Excel சம்பந்த பட்ட விடயங்கள் தொடர்பான பயிற்சி | 02 | 2019.05.02 , 08 ரூ15 | 30 | - | உள்நாடு | Excel செயற்படுத்தல் மூலம் கடமைகளை எளிதாக்குதல் |
| ICT for Management Assistant | 01 | 2019.06.03 ரூ04 | 13 | - | உள்நாடு | கனினி பயன்பாடு அறிமுகம் Ms office Internet & Email பற்றிய அடிப்படை அறிவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அரச நிறுவனங்களில் ஒழுங்கு (Disciplinary) முகாமைத்துவம் | 03 | 2019.08.05,06 ,07 | 36 | - | உள்நாடு | அரசு நிறுவனங்களில் ஒழுங்கு முகாமைத்துவம் மற்றும் செயல்முறை குறித்த விழிப்புணர்வு |
| Project Proposals சம்பந்த பட்ட விடயங்கள் தொடர்பான பயிற்சி பட்டறை | 02 | 2019.08.20 ,21 | 14 | - | உள்நாடு | திட்ட முன்மொழிவுகள், பல்வேறு மாதிரிகள் மற்றும் திட்டங்களின் முக்கியத்துவம் |
| Office System | 03 | 2019.08.22 ,23 | 36 | - | உள்நாடு | அலுவலக முறைகள் குறித்த அடிப்படை அறிமுகம் மற்றும் நடைமுறை நடவடிக்கைகள் குறித்த சரியான புரிதலைப் பெறுதல் |
| Clerical Skills | 08 | 2019.09.16 17 18 | 120 | - | உள்நாடு | புதிய அதிகாரிகளுக்கு அரச சேவை செயல்பாடுகள் குறித்த அடிப்படை அறிவை வழங்குதல் |
| கணக்கீட்டு நியமங்கள் | 03 | දින 08 | 54 | - | உள்நாடு | புதிய பொது கணக்கியல் தரநிலைகள் 10 முதல் 20 வரை அறிமுகம் செய்தல் மற்றும் அதன் பயன்பாடுகள் |
| Project Proposals | 04 | 2019.10.16 17 18 | 72 | - | உள்நாடு | திட்ட முன்மொழிவுகள், மற்றும் அது தொடர்பான பல்வேறு மாதிரிகள் மற்றும் திட்டங்களின் முக்கியத்துவம் |
| Career Guidance - UK exposure visit - England | 01 | 2019.03.10 - 2019.03.14 | 28.89 | - | வெளிநாடு | About UK Career guidance system |
| ITEC - Training of Trainers in Entrepreneurship and Skills Development (TOT-ESD) - India | 01 | 2019.01.23 - 2019.03.19 | 215.76 | - | வெளிநாடு | சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோரின் வளர்ச்சிக்கான நடைமுறை |
| ITEC - Manpower Information System - India | 01 | 2019.01.21 - 2019.03.01 | 215.76 | - | வெளிநாடு | Manpower Information System மென்பொருள் மற்றும் அதன் பயன்பாடு பற்றிய விளக்கம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Acadamy on Employment - Italy | 02 | 2019.05.04-2019.05.18 | 429 | - | வெளிநாடு | |
| NILS - Capacity Building Training (Certificate Program) for Development PartnersChina | 01 | 2019.06.12-2019.06.25 | 611 | - | வெளிநாடு | About Hr training, E-commerce development & major power strategy of china |
| Addressing the Challenges of youth NEET" - instruments and responses for labour market inclusion - Italy | 01 | 2019.09.14 - 2019.09.22 | 72.5 | - | வெளிநாடு | About youth neets engagement in labour market |
| Policy Consultation Programme Conducted by KEIS - Korea | 01 | 2019.09.22-2019.09.28 | 360 | - | வெளிநாடு | About Public Employment service programmes,(work NET, HRD NET,Employment relations program & Career Guidance Programmes) |

## 6.4 நிறுவனத்தின் செயல்திறனுக்கான பயிற்சித் திட்டங்களுக்கு பங்களிப்பு செய்தல்

2019 ஆம் ஆண்டிற்கான, திணைக்கள அதிகாரிகளுக்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகளை வழங்கியுள்ளோம், இதன் மூலம் திணைக்களத்தின் செயல்திறனை மிக உயர்ந்த மட்டத்தில் பராமரிக்க முடியும் என திணைக்களம் நம்புகிறது.

அதன்படி, நிறுவனங்கள் மற்றும் கணக்குப் பிரிவில் உள்ள பொது முகாமைத்துவ உதவியாளர்கள் சேவையின் அதிகாரிகளுக்கான ஸ்தாபனக் கோவை விதிகள் மற்றும் நடைமுறைகள், தனிப்பட்ட கோப்புகளைப் பராமரித்தல், பொது அதிகாரிகளின் விடுமுறை, முகாமைத்துவ உதவியாளருக்கான தகவல் தொழில்நுட்பம் ICT, பொது நிறுவனங்களில் ஒழுங்கு முகாமைத்துவம், அலுவலக அமைப்பு Office System முகாமைத்துவ அலுவலர்களுக்கான திறன்கள், கணக்கியல் தரநிலைகள் மற்றும், அதிகாரிகளின் அறிவு மற்றும் செயல்திறனை மேம்படுத்த எக்செல் பயிற்சித் Advance Excel திட்டங்களை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

தலைமை அலுவலகம், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் பணிபுரியும் கள அலுவலர்களுக்கான Carrer Key, நிரல் தரவு அமைப்பு நடைமுறைப்படுத்தல், மற்றும் முன்னேற்ற மதிப்பீடு, திட்ட முன்மொழிவு குறித்த பயிற்சி பட்டறைகள். ITEC - Training of Trainers in Entrepreneurship and Skills Development (TOT-ESD)– India ITEC - Manpower Information System - India>Addressing the Challenges of youth NEET" - instruments and responses for labour market inclusion – Italy Policy Consultation Programme Conducted by KEIS – Korea போன்ற துறைகளில் நாங்கள் வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகளை வழங்கினோம், மேலும் பொதுமக்களுக்கு முறையான மற்றும் திறமையான சேவையை வழங்குவதே எங்கள் நோக்கம்.

திணைக்களத்தில் நிரந்தரமாக பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு கூடுதலாக National Framework for Higher education and Technical Training – England Acadamy on Employment – Italy NILS – Capacity Building Training (Certificate Program) for Development Partners China போன்ற துறைகளில் பயிற்சி திட்டங்களை வழங்கியுள்ளோம் இந்த அதிகாரிகள் குறிக்கோள்களை அடைய தேவையான சரியான தூர நோக்கு சிந்தனையை பெறுவார்கள் என்று திணைக்களம் நம்புகின்றது.

எனவே, திணைக்களத்தின் மேம்பாட்டிற்காக, திணைக்கள அதிகாரிகளுக்கு சுமார் 22. மில்லியன் செலவில் பயிற்சி அளித்துள்ளோம், மேலும் திறமையான பொது மக்கள் சேவையை வழங்குவதே எங்கள் நோக்கம்.

# அத்தியாயம் 07

# இணக்க அறிக்கை

## 07. அத்தியாயம் - இணக்க அறிக்கை

| இலக்கம் | விண்ணப்பிக்க தேவையான தேவைப்பாடுகள் | உடன்பாடு | இணங்கவில்லை எனில் அது தொடர்பான சுருக்க விபரம் | இணங்காத விடயங்கள் குறித்த விடயங்களை எதிர்காலத்தில் தவிர்ப்பதற்காக துல்லியமான முடிவுகளை எடுப்பதற்கான செயற்பாடுகள். |
|---|---|---|---|---|
| **1** | பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்கு அறிக்கைகள் என்பன உரிய திகதிக்குள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன | (இனங்குகிறது / இனங்கவில்லை | | |
| 1.1 | ஆண்டு நிதிநிலை அறிக்கைகள் | | | |
| 1.2 | அரசு அதிகாரிகளின் அட்வான்ஸ் கணக்கு | இனங்குகிறது | | |
| 1.3 | வனிக மற்றும் உற்பத்தி முன்னேற்ற கணக்குகள் (வனிக முற்பன கணக்குகள்)பொருந்தாது | இனங்குகிறது | | |
| 1.4 | களஞ்சிய சாலை அட்வான்ஸ் கணக்குகள் | இனங்கவில்லை | | |
| 1.5 | விசேட அட்வான்ஸ் கணக்குகள் | இனங்கவில்லை | | |
| 1.6 | மற்றவை | இனங்கவில்லை | | |
| **2** | புத்தகங்கள் மற்றும் ஆவணங்களின் பராமரிப்பு (நி.பி 445) | இனங்கவில்லை | | |
| 2.1 | பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 அமைவாக நிலையான சொத்து பதிவேட்டின் படிபுதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது | இனங்குகிறது | | |
| 2.2 | தனிப்பட்ட ஊதியங்கள் / தனிப்பட்ட ஊதிய அட்டைகளைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இனங்குகிறது | | |
| 2.3 | கனக்காய்வு வினா பட்டியல் புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது. | இனங்குகிறது | | |
| 2.4 | உள்ளக கனக்காய்வு அறிக்கை ஆவனம் புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது | இனங்குகிறது | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து உரிய திகதியில் திறைசேரிக்கு சமர்ப்பித்தல். | இனங்குகிறது | | |
| 2.6 | காசோலை மற்றும் காசு கட்டளை என்பவற்றை புதுப்பித்து பராமரித்தல் | இனங்குகிறது | | |
| 2.7 | இருப்பு பதிவுகளை புதுப்பித்த நிலையில் வைத்திருத்தல் | இனங்குகிறது | | |
| 2.8 | பொருள் பதிவு பதிவேட்டை பராமரித்தல் | இனங்குகிறது | | |
| 2.9 | சேத பதிவு பதிவேட்டை புதுப்பித்து பராமரித்தல் | இனங்குகிறது | | |
| 2.10 | பொறுப்பு பட்டியலை பராமரித்தல் | இனங்குகிறது | | |
| 2.11 | துண்டுப்பிரசுர ஆவனங்களை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் (GA- / N20) | இனங்குகிறது | | |
| 03 | **நிதி கட்டுப்பாட்டு செயற்பாட்டுக்கான** | இனங்குகிறது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | **பிரதிநிதித்துவம்** (நி.பி. **135)** | | | |
| 3.1 | நிதி கட்டுப்பாட்டு செயற்பாட்டுக்கான பிரதிநிதித்துவம் (நி.பி. 135) | இணங்குகிறது | | |
| 3.2 | நிறுவனத்திற்குள் நிதி அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளது | இணங்குகிறது | | |
| 3.3 | நிதி அதிகாரங்களை மாற்றுவது தொடர்பில் நிறுவனத்திற்குள் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும் | இணங்குகிறது | | |
| 3.4 | ஒவ்வொரு நிதி பரிவர்த்தனைக்கும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரிகளின் ஒப்புதல் பெறப்படுத்தல் வேண்டும் | இணங்குகிறது | | |
| **4** | 17/2004 தேதியிட்ட 11.05.2014 அரச கணக்கு சுற்றறிக்கையின் படி அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பைப் பயன்படுத்துதல் இந்த மென்பொருள் கணக்காளர்கள் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகிறது | இணங்குகிறது | | |
| 4.1 | ஆண்டு திட்டங்களை தயாரித்தல் | இணங்குகிறது | | |
| 4.2 | வருடாந்த பெறுகை தயாரிப்பு வருடாந்த திட்டமிடல் திட்டம் தயாரித்தல் | இணங்குகிறது | | |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரிப்பு | இணங்குகிறது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் அதனை தேசிய வரவு செலவு திட்ட திணைக்களத்திற்கு (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணங்குகிறது | | |
| 4.5 | வருடாந்த பணப்புழக்க அறிக்கை தயாரித்தல் ஒரு நாளைக்கான திறைசேரி நடவடிக்கைகள் | இணங்குகிறது | | |
| **5** | வருடாந்த பணப்புழக்க அறிக்கையை திறைசேரி செயல்பாட்டுத் திணைக்களத்திற்கு உரிய திகதிக்குள் வழங்குதல். | இணங்குகிறது | | |
| | கணக்காய்வாளர் நாயகம் அவர்களால் வழங்கப்பட்ட திகதியில் கணகாய்வு சம்பந்தப்பட்ட அனைத்து கேள்விகளுக்கும் பதிலளித்தல். | இணங்குகிறது | | |
| 6 | **உள்ளக கணக்காய்வு** | இணங்குகிறது | | |
| 6.1 | 134 (2) DMA /-அமைவாக 2019 ஆரம்பத்தில் கணக்காய்வு ஆணையாளர் நாயகத்துடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலுக்குப் பிறகு உள்ளக கணக்காய்வு திட்டம் ஒன்றை தயாரித்தல் | இணங்குகிறது | | |
| 6.2 | ஒவ்வொரு உள் கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளிக்க ஏற்பாடுகளை செய்தல் | இணங்குகிறது | | |
| 6.3 | 2018 திகதியிடப்பட்ட தேசிய கணக்காய்வு 19 வது சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில்அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளிலும் நகல்கள் கணக்காய்வு முகாமைத்துவ பிரிவுக்கு சமர்ப்பிக்கப்படும். | இணங்குகிறது | | |
| 6.4 | நிதி ஒழுங்குமுறை 134 (3) இன் படி உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்கள் கணக்காய்வு ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பப்படும் | இணங்குகிறது | | |
| **7** | கணக்காய்வு முகாமைத்துவ குழு | இணங்குகிறது | | |
| 7.1 | DMA சுற்றறிக்கை 1-2019இன் அடிப்படையில் ஆகக்குறைந்தது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் 4 அந்த வருடத்தில் நடாத்தியிருத்தல். | இணங்குகிறது | | |
| **8** | **சொத்து முகாமைத்துவம்** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8.1 | 01/2017 திகதி இடப்பட்ட முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 வது அத்தியாயதிற்கு அமைவாக சொத்து கொள்முதல் மற்றும் துஷ்பிரயோகம் தொடர்பான தகவல் தலைமை கணக்காய்வு ஆனையாளர் நாயக தினைக்களத்திற்கு அனுப்பப்படுத்தல் வேண்டும். | இனங்குகிறது | | |
| 8.2 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 வது அத்தியாயத்தின்படி தலைமை கனக்காய்வாளர் நாயகத்திற்கு கனக்காய்வு தொடர்பான தகவல்களை வழங்குவதற்கும் ஒருங்கினைப்பு அதிகாரி ஒருவரை நியமிக்கப்படுத்தல் வேண்டும். | இனங்குகிறது | | |
| 8.3 | பொது நிதி சுற்றறிக்கை இலக்கம் 05/2016 படி பொருட்கள் தொடர்புடைய அறிக்கைகளை ஆய்வு செய்து உரிய திகதியில் கனக்காய்வாளர் நாயகத்துக்கு அனுபுதல். | இனங்குகிறது | | |
| 8.4 | வருடாந்த பொருள் கனக்கெடுப்பின்போது மேலதிக தேய்மான பொருட்கள் கழிக்கப்படுதல் வேண்டும் அந்த நேரத்தில் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் பின்பற்றப்படுத்தல் வேண்டும். | இனங்குகிறது | | |
| 8.5 | நி.பி.772 க்கு இனங்க தேவையற்ற பாவனைக்கு உதவாத பொருட்களை அகற்றுதல். | இனங்குகிறது | | |
| **9** | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | தினந்தோறும் பாவிக்கப்படும் பூல் வாகனங்கள் தொடர்பாக தினந்தோறும் குறிப்புக்கள் எடுக்கப்பட்டு மாதாந்த சாராம்ச அறிக்கை தயாரிக்கப்பட்டு கனக்காய்வாளர் நாயகத்துக்கு அனுப்பப்படுத்தல் வேண்டும். | இனங்குகிறது | | |
| 9.2 | வாகனங்கள் சேவையில் இருந்து ஒதுக்கப்பட்ட 6 மாத காலங்களுக்குள் அது அகற்றப்படுதல் வேண்டும் | இனங்குகிறது | | |
| 9.3 | வாகன பதிவுகள் புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்படுத்தல் வேண்டும். | இனங்குகிறது | | |
| 9.4 | ஒவ்வொரு விபத்து விபத்து சம்பந்தமாகவும் முரே 103,104,109, மற்றும் 110 ல் குறிப்பிட்டுள்ளபடி செயற்படவும் | இனங்குகிறது | | |
| 9.5 | 2016/30 இலக்க 29-12-2016 திகதியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை 3.1பந்தியில் குறிப்பிட்டுள்ளபடி வாகன எரிபொருள் பாவனை தொடர்பாக மீன்டும் பரிசோதனை செய்யப்படுதல். | இனங்குகிறது | | |
| 9.6 | குத்தகை காலத்திற்குப் பிறகுவரி பதிவு புத்தகங்களில் உரித்து உடமையை உறுதிசெய்தல். | இனங்குகிறது | | |
| **10** | **வங்கி கணக்கு முகாமைத்துவம்** | | | |
| 10.1 | உரிய திகதியில் வங்கி ஒப்பீட்டு அறிக்கைகளை | இனங்குகிறது | | |
| 10.2 | தயாரித்து அவற்றைத் உறுதி செய்தபின்ளர் கனக்காய்வு செய்வதற்கு சமர்ப்பித்தல் | இனங்குகிறது | | |
| 10.3 | நடப்பு ஆன்டிலோ அல்லது அதற்கு முன்னைய ஆன்டிலோ செயற்படாத வங்கி கனக்குகள் யாவும் தீர்க்க பட்டு இருக்க வேன்டும். | இனங்குகிறது | | |
| **11** | **ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்** | இனங்குகிறது | | |
| 11.1 | குறிப்பிட்ட ஏற்பாடுகளை மீறாமல் செலவுகள் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும். | இனங்குகிறது | | |
| 11.2 | நி.பி. 94 (1) இன் படி வழங்கப்பட்டுள்ள ஏற்பாட்டைப் பயன்படுத்திய பிறகு ஆண்டின் இறுதியில் மீதமுள்ள ஏற்பாட்டு வரம்பை மீறாத வகையில் பொறுப்புகளுக்களை ஏற்றல் | இனங்கவில் லை | தேவையாள ஒதுக்குகள் வழங்கப்படா மை | அத்தியாவசிய செலவுகளுக்கு கோரும் ஒதுக்குகளை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | காரனமாக வழங்கப்பட்ட வரையறுக்கப் பட்ட ஒதுக்குகளுக் கு மேலாக அத்தியாவசி ய செலவுகளை தரிக்க வேண்டியேற்ப ட்டது. | வழங்குதல். |
| **12** | அரசு அதிகாரிகளின் முற்பன கனக்குகள் | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இனங்குதல் | இனங்குகிறது | | |
| 12.2 | நிலுவைத் தொகையை பகுப்பாய்வு செய்தல் | இனங்குகிறது | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலாக உள்ள உள்வரும் நிலுவைத் தொகை தீர்க்கப்பட்டு இருத்தல் | இனங்குகிறது | | |
| **13** | பொது வைப்பு கனக்கு | இனங்குகிறது | | |
| 13.1 | காலதாமத வைப்பு தொடர்பாக நி.பி. 571 இன் படி செயற்படுத்தல். | இனங்குகிறது | | |
| 13.2 | பொது வைப்புக்கான கட்டுப்பாட்டு கனக்கை பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல் | இனங்குகிறது | | |
| **14** | **கட்டுநிதி கனக்கு** | இனங்குகிறது | | |
| 14.1 | ஆண்டின் இறுதியில் மீளாய்வு செய்யப்பட்ட கனக்கு மிகுதி அறிக்கையை திறைசேரியின் செயல்பாட்டுத் துறைக்கு பரிமாற்றம் செய்தல். | இனங்குகிறது | | |
| 14.2 | நி.பி. 371 இன் கீழ் இடைக்காலத்தில் செய்யப்பட்ட உண்மையான வேலைகள் மாத இறுதியில் நிறைவு செய்யப்பட்டு இருக்க வேண்டும். | இனங்குகிறது | | |
| 14.3 | நி.பி. 371 இன் படி பனி இடைக்கால தடை உத்தரவு அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறக்கூடாது | இனங்குகிறது | | |
| 14.4 | கட்டுநிதி கனக்கின் மீதியை திறைசேரியின் கனக்கு இருப்பு புத்தகத்துடன் மாதாந்த ஒப்பீடு செய்தல் | இனங்குகிறது | | |
| **15** | வருமான கனக்கு | | | |
| 15.1 | தொடர்புடைய விதிமுறைகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்திய பிறகு வைத்திருத்தல் | இனங்கவில் லை | | |
| 15.2 | திரட்டப்பட்ட வருமான வைப்பு கனக்கில்கடன் இல்லாமல் நேரடி வருமான வரவில் வைத்தல். | இனங்கவில் லை | | |
| 15.3 | நி.பி. 176 இன் படி வருமான பதிவு பற்றாக்குறை தொடர்பான விபரங்கள் கனக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்க வேண்டும். | இனங்கவில் லை | | |
| **16** | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| | அனுமதிக்கப்பட்ட ஆளனியை கொண்டு கடமைகளை முன்னெடுத்தல் | இனங்குகிறது | | |
| 16.1 | அனைத்து ஊழியர்களுக்கும் எழுத்துப்பூர்வமாக கடமை பட்டியல்களை வழங்கியிருக்க வேண்டும். | இனங்குகிறது | | |
| 16.2 | 20.09.2017 திகதி இடப்பட்ட MSD சுற்றறிக்கை என் 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளையும் முகாமைத்துவ சேவைகள் துறைக்கு சமர்ப்பித்தல். பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல். | இனங்குகிறது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 16.3 | | இணங்குகிறது | | |
| **17** | **பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல்** | இணங்குகிறது | | |
| 17.1 | தகவல் அறியும் சட்டத்தின் பிரகாரம் தகவல் உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து தகவல் வழங்கும் ஆவணத்தை இற்றைவரைப்படுத்தி பேணிச் செல்லுதல் | இணங்குகிறது | | |
| 17.2 | நிறுவனத்தை பற்றிய தகவல்கள் அதன் வலைத்தளத்தின் மூலமாகவும், அல்லது மாற்று வழிகள் மூலமாகவோ நிறுவனத்தை பற்றிய பாராட்டுக்களையும் / குற்றச்சாட்டுகளையும் இடுகையிடும் வசதி வழங்கப்பட்டுள்ளது. | இணங்குகிறது | | |
| 17.3 | தகவல் சட்டத்தின் பிரிவு 08 மற்றும் 10 ன் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல். | இணங்குகிறது | | |
| 18 | **சேவை பெறுநர் பட்டயத்தை நடைமுறைப்படுத்துதல்** | இணங்குகிறது | | |
| 18.1 | இலக்கம் 05/2008 மற்றும் 05/2018(1) கொண்ட அ.நி.சு. பிரகாரம் சேவை பெறுநர் பட்டயத்தை தயாரித்து நடைமுறைப்படுத்துதல். | இணங்குகிறது | | |
| 18.2 | அச்சுற்றறிக்கையின் 2.3ஆம் பந்திக்கமைய சேவைபெறுநர் பட்டயத்தை தயாரித்து நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டை மேற்பார்வை செய்தல் மற்றும் அவற்றை மதிப்பீடு செய்வதற்கு நிறுவனத்தினால் ஒரு முறை தாயரிக்கப்படுதல். | இணங்குகிறது | | |
| 19 | **மனிதவள திட்டங்களைத் தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 ஆந் திகதிய அ.நி.சு.இலக்கம் 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தை அடிப்படையாகக் கொன்டு மனிதவள திட்டத்தைத் தயாரித்தல். | இணங்குகிறது | | |
| 19.2 | மனித வள திட்டமிடலுக்கமைய அனைத்து ஊழியர்களுக்கும் வருடத்திற்கு ஆகக் குறைந்தது 12 மனித்தியால பயிற்சி வழங்கப்பட்டிருத்தல். | இணங்குகிறது | | |
| 19.3 | இணைப்பு 01இற்கமைய வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தமொன்று கையொப்பமிடப்பட்டிருத்தல். | இணங்கவில்லை | மாவட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களை பிரதான அலுவலகத்திற்கு வரவழைப்பதில் சிக்கல் நிலவியதால் 2019ஆம் ஆண்டில் அதனை மேற்கொள்ள முடியாது போனது | மாவட்ட உத்தியோகத்தர்கள் ஊடாக ஒப்பநதங்களை கையொப்பமிடுவதற்கு அனுப்புதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.4 | 6.5 பந்திக்கமைய மனிதவள அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்படுதல், இயலளவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்படுதல், திறன் அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்படுதல் தொடர்பான பொறுப்புக்களை ஒப்படைத்து சிரேஸ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படுதல். | இணங்குகிறது | | |
| 20 | **கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்.** | | | |
| 20.1 | கடந்த வருடத்தில் கணக்காய்வு தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அளித்திருத்தல். | இணங்குகிறது | | |

# இணைப்புக்கள்

பணிப்பாளர் நாயகம்,
மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

**மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் 2019.12.31ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்குரிய நிதிக்கூற்று தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பந்தியின் படி கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை**

.......................................................................................................................

1. **நிதிக் கூற்றுக்கள்**

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் 2019 டிசெம்பர் 31ஆம் திகதியின் நிதி நிலைமை தொடர்பான கூற்று, அன்றைய திகதியில் முடிவடைந்த வருடத்திற்குரியதான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சற் கூற்றுகள் உள்ளடங்கிய 2019 டிசெம்பர் 31ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்று 2019 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணைந்து வாசிக்கக்கூடிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசினுடைய அரசியல் யாப்பின் 154(1 ) உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க எனது கட்டளையின் படி கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பந்தியின் படி போக்குவரத்து திணைக்களத்திடம் முன்வைக்கப்படுகின்ற இந்த நிதிக் கூற்று தொடர்பான எனது கருத்துக்களை குறிப்பிடுதல் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கை சனநாயக சோசலிச குடியரசினுடைய அரசியல் யாப்பின் 154(6) வது உறுப்புரையுடன் இணைந்து வாசிக்க வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10வது பந்தியின் பிரகாரம் சமர்ப்பிக்கபடவேண்டிய கணக்காய்வு தலைமையதிபதியின் அறிக்கை எதிர்வரும் காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிற்குரிய தாக்கத்தினைத் தவிர, 2019 டிசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட அந்த நிதிக் கூற்றுக்களினால் 2019 டிசெம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறான போக்குவரத்துத் திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் ஆகியன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு ஏற்ப உண்மையினையும் நியாயத்தன்மையினையும் பிரதிபலிக்கின்றது என்பது நான் கொண்டுள்ள அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம் மீதான கருத்துரைகள்

இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு (இ.க.நி.) ஏற்ப நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். நிதிக் கூற்றுக்கள் தொடா்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கருத்துக்களுக்குரிய அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க உண்மையினையும் நியாயத்தினையும் பிரதிபலிக்கின்றவாறு 2019 டிசெம்பர் 03ஆம் திகதிய 27/2019 ஆம் இலக்க அரச சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிற்கு அமைய இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதொரு உள்ளக நிர்வாகத்தை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவிற்கமைய திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலத்திற்குரித்தான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடியவாறு அதனுடைய வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக நிர்வாக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச்செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டியதுடன், அந்தக் கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு அதற்கேற்ப கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக பயனுள்ளவாறு நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களுக்கு அப்பாற்பட்டதொன்றதென நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல்கள் உயர் மட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டாலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இல்லையென்பதனை உறுதிப்படுத்துவதாக இருக்கமாட்டாது. மோசடி மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக்கூடுமெனினும், இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயனாளர்களினால் பொருளாதார தீர்மானங்களை மேற்கொள்ளும்போது இவை தொடர்பாக போதியளவு கவனத்தைச் செலுத்த முடியும்.

என்னால் துறைசார் ஆளுமையுடனும் துறைசார் ஐயத்துடனும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தவிர்த்துக்கொள்வதற்கு, போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் இடம்பெறும் தாக்கங்களினை விட மோசடிகளினால் எழுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, போலியான ஆவணங்களைத் தயாரித்தல், நானாவித விட்டுவிடுதல்கள், அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவறவிடுதல் ஆகியன மோசடிகள் ஏற்படுவதற்கு ஏதுவாக அமைகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பான அடிப்படைக் கருத்துக்களை தெரிவிக்க அபிப்பிராயப்படவில்லை.

- வெளிப்படுத்துதல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமானதும் நியாயமானதுமான முறையில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஓட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும்போது, நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உள்ளடங்கியுள்ளதாக.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கிய குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் ஒத்திருந்ததெனவும்,

(ஆ) முன்னைய வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் மீளாய்வாண்டிற்காக முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுகள் மீதான கருத்துரை

1.6.1 நிதிக் கூற்றுக்கள் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைய இல்லாமை
கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) நிதிப்பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும் போது அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 271/2019 மற்றும் 2019 டிசம்பர் 03ஆந் திகதிய அரச கணக்குகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய நிதிப்பிரமாணம் 208இன் பிரகாரம் திணைக்களத்தின் தலைப்புக்களுக்கு பிற தலைப்புக்களிலிருந்து பற்று வைக்கப்படுகின்ற செலவுகள் உள்ளடக்கப்படக்கூடாதெனினும் திணைக்களத்தினால் நிதிப்பாய்ச்சல் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பிற தலைப்புக்களின் ஊடாக தயாரிக்கப்பட்ட தனியாள் சம்பளம் மற்றும் பிற தொழிற்பாட்டு செலவுகள் ரூ.18,652,183 மற்றும் மூலதனச் செலவுகள் ரூ.9,450,644ஐ உள்ளடக்கியதால் தொழிற்பாட்டு செயற்பாடுகளில் உருவான நிதிப்பாய்ச்சல் மற்றும் முதலீட்டு செயற்பாடுகளில் உருவான நிதிப்பாய்ச்சல் முறையே அளவுகளில் குறைவாகவே காட்டப்பட்டிருந்தது.

(ஆ) அரச நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் திணைக்களத்தின் நிதி செயற்றிறன் அறிக்கையைத் தயாரிக்கும் போது இலக்கம் 32801 என்ற முற்பணக் கணக்கு 'பீ' கணக்கிற்குரித்தாகவும் திறைசேரியின் குறிப்புகளுக்கமையவும் வரவு மற்றும் பற்றுக்களை கவனத்திற் கொள்ளவேண்டியிருப்பினும் அவ்வாறு செய்யாததால் வருடத்தின் பற்று (செலவுகள்) ரூ.963,361 அதிகமாகவும் வருடத்தின் வரவு (பெறுவனவுகள்) ரூ.699,637 குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2019 டிசம்பர் 03ஆந் திகதி அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 271/2019இன் 7(vi) ஆம் பந்திக்கமைய 2019 டிசம்பர் 31ஆந் திகதியில் கட்டுநிதி மீதி மற்றும் நிதிப்பாய்ச்சல் கூற்றின் 2019 டிசம்பர் 31ஆந் திகதியில் காசு மீதியை பொருத்துவதற்கு கட்டுநிதி இணக்க கணக்கை தயாரிக்க வேண்டியிருப்பினும் திணைக்களத்தினால் கட்டுநிதி கணக்கைத் தயாரிக்கும் போது திணைக்களத்தின் கணக்குகளுக்கு மேற்கொள்ளப்படுகின்ற வரவு மற்றும் பற்று குறிப்புகளையும் உள்ளடக்கி வருட இறுதியில் திறைசேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய மீதியை காட்டுமாறு தயாரிக்கப்பட்டிருந்தது. இதனடிப்படையில் இணைப்பு 01இன் ஊடாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கட்டுநிதி இணக்க கணக்கானது சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 271/2019 மற்றும் 2019/12/03ஆந் திகதிய சுற்றறிக்கைக்கமைய நிதி நிலைமை கூற்றின் தேறிய சொத்துக்கள் மற்றும் மூலதனத்தின் கீழ் உள்ள தேறிய சொத்துக்களானது திணைக்களத்தினது முற்பணக் கணக்கு பெறுமதிகளிலிருந்து வைப்புக் கணக்கின் பெறுமதியை கழிப்பதன் மூலமே பெறப்படுகின்றது. அதனடிப்படையில் தேறிய சொத்துக்களது பெறுமதியானது ரூ.39,268,764 ஆகக் காணப்பட்டாலும் நிதி நிலைமைகள் தொடர்பான கூற்றில் தேறிய சொத்துக்களாக ரூ.39,010,682 என ரூ.258,082 தொகை குறைவாகக் காட்டிப்பட்டிருந்தது. அவ்வாறே ரூ.258,082 தொகை பணம் மற்றும் காசுக்குச் சமமான பொருட்கள் (ACA – 3) நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6.2 சொத்துக்கள் பொறிமுறைகள் மற்றும் உபகரணங்கள்**

கீழே காட்டப்பட்டுள்ளவைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றுக்கமைய (ACA -6) ஆண்டில் நிலையான சொத்துக்களது கொள்வனவின் பெறுமதி ரூ.4,493,462 என காட்டப்பட்டிருந்தாலும் நிதி செயலாற்றுகை கூற்றுக்கமைய நிலையான சொத்துக்களை எடுத்துக் கொள்வதன் பெறுமதி ரூ.796,130ஆகக் காணப்பட்டதால் நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றுக்கள் மற்றும் நிதி செயலாற்றுகை கூற்றுக்கிடையிலான மூலதன சொத்துக்களை எடுத்துக் கொள்ளலில் ரூ.3,697,332 பெறுமதியான வேறுபாட்டைக் காண முடிந்தது. வேறுபாடுகளுக்கான காரணங்கள் கணக்காய்வில் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஆ) நிதி நிலைமைக் கூற்றுக்களை தயாரிக்கும் போது அரச நிதி சுற்றறிக்கைக்கமைய நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ACA 6) தரவுகளை உரித்தாக்கிக் கொள்ளுதல் வேண்டும். ACA 6 படிவத்திற்கமைய ஆரம்ப மீதி ரூ.73,938,806ஆகக் காணப்பட்டாலும் நிதி நிலைமைக் கூற்றிற்கமைய சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களது கடந்த ஆண்டு இறுதிப் பெறுமதி ரூ.70,978,466ஆகக் காணப்பட்டது.

இதனடிப்படையில் அந்த இரண்டு கூற்றுக்களுக்கிடையே சொத்துக்கள் பொறிமுறைகள் மற்றும் உபகரணங்களது ஆரம்ப மீதிக்கிடையே ரூ.2,960,340 பெறுமதியான வேறுபாடு காணப்பட்டது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவு முகாமைத்துவம்**

திணைக்களத்திற்காக ஒதுக்கீட்டுச் சட்டத்தின் ஊடாக ஒதுக்கப்பட்ட மூலதன ஏற்பாடு ரூ.35,000,000 ஆகக் காணப்பட்டதுடன் அதில் ரூ.9,566,117 ஏற்பாடு மீதியாகக் காணப்பட்டதுடன் அது மொத்த ஏற்பாட்டில் 27%ஆகக் காணப்பட்டது. இந்த வேறுபாட்டிற்குக் காரணம் வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தின் ஊடாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கமைய மீதப்படுத்தப்பட்டதென காட்டப்பட்டிருந்தாலும் 6 செலவு விடயங்களது மீதி ரூ.7,435,441 ஆகக் காணப்பட்டதுடன் அது 40 வீதம் தொடக்கம் 93 வீதம் வரையான இடைவெளியைக் காட்டியது. அந்த வேறுபாட்டிற்கான காரணங்கள் காட்டப்படவில்லை.

**2.2 கணக்குப்பொறுப்பு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதியளித்தல்கள்**

---

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 வது பிரிவின் ஏற்பாடுகளிற்கு அமைய கணக்குப்பொறுப்பு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் உறுதியளித்தல்கள் மேற்கொள்ள வேண்டியிருப்பினும், அதன்படி செயற்பட்டிருக்கவில்லை.

(அ) திணைக்களத்தின் நிதி நிர்வாகம் தொடர்பாக பயனுறுதிவாய்ந்த உள்ளக நிர்வாக கட்டமைப்பொன்று தயாரிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென்பதனை கணக்குப்பொறுப்பு உத்தியோகத்தர் உறுதியளித்தல் வேண்டும் என்பதுடன் அந்தக் கட்டமைப்பின் பயனுறுதி தொடர்பில் ஏற்கனவே மேற்கொண்ட மீளாய்வினை மேற்கொண்டு அதற்கேற்ப கட்டமைப்பை பயனுறுதி மிக்கதாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், அந்த மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியினை கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்றுகள் கணக்காய்வு தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவில்லை

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்காமை**

---

**சட்டங்கள், விதிகள் மற்றும்** **இணங்காமை**

**பிரமாணங்களுக்குரிய தொடர்புகள்**

| | |
|---|---|
| (i) பெறுகை வழிகாட்டல் கோவை 3.4.3 (அ) மற்றும் (ஆ) பந்தி | காகிதாதிகள், பருவ சஞ்சிகைகள் மற்றும் வெளியீடுகள் போன்ற விசேட வகையைச் சேர்ந்த பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கக்கூடிய வழங்குனர்களை பதிவுசெய்தல் கட்டாயம் எனினும் திணைக்களத்தின் பிரதான செயற்பாடான வெளியீடுகளை மேற்கொள்வதற்கு அத்தகைய விதத்தில் விண்ணப்பதாரிகள் பதிவு செய்யப்படாதிருந்தனர். மீளாய்வு வருடத்தில் திணைக்களத்தினால் வெளியீடுகளை செய்வதற்கு ரூ.3,269,150 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| (ii) 1994 ஏப்பிரல் 20ஆந் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 30/94இன் 5.2.3ஆம் பந்தி | சர்வதேச தொழில் அமைப்பினால் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூ.2,885,200 பெறுமதியான உபகரணங்களது உரிமைகள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தாலும் சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய அவற்றை கணக்கில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 2.4 முற்பணம் வழங்குதல் மற்றும் செலுத்துதல்

நி.பி.371(5) இற்கமைய அனைத்து சிறுகட்டுநிதிகளும் உரிய வருடத்தின் டிசம்பர் 31ஆந் திகதியில் தீர்க்கப்பட வேண்டுமெனினும் 2019 டிசம்பர் 31ஆந் திகதியில் தீர்க்கப்படாத கட்டுநிதி மீதி ரூ.258,083ஆகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு மற்றும் செயலாற்றுகை

முன்வைக்கப்படுகின்ற நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக செயற்பாட்டு மீளாய்வு, பேண்தகு அபிவிருத்தி, நல்லாட்சி மற்றும் மனித வள முகாமைத்துவம் ஆகியவற்றிற்குரிய கணக்காய்வு அவதானிப்புகள் மேற்குறிப்பிட்டுள்ள 1.1 பந்தியில் குறிப்பிட்டுள்ள 2018 ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 வது பிரிவின் பிரகாரம் முன்வைக்கப்படுகின்ற அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

டீ.பீ.ஜ.பத்மினி,
உதவி கணக்காய்வாளர் தலைமையதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பதிலாக